ஜெர்மனியிலுள்ள நூர் பள்ளிவாயில் திறப்பு விழாவில் விருந்தினர்களுக்கு ஹுஸூர் அன்வர் அவர்கள் ஆற்றிய உரை
பக்கம் 3

காதியானில் நடைபெற்ற அன்ஸார், குத்தாம், லஜ்னா தேசிய இஜ்திமாவிற்காக ஹுஸூர் அன்வர் அவர்கள் வழங்கிய தூதுச் செய்தி
பக்கம் 10

ஜமாஅத்தின் பொருள் தியாகத் திட்டங்கள், அவற்றின் சுருக்கமான அறிமுகம் அதன் நோக்கம், குறிக்கோள் மற்றும் எந்த ஃபண்டில் தொகையைச் செலுத்த வேண்டும் என்ற விபரம்
பக்கம் 18

மலையைக் கண்டு மலைத்தேன்
பக்கம் 23

மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | December 2023 | Vol. 3 - Issue No. 1
Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340



நூர் பள்ளிவாசல்
ஃபிராங்கெந்தல், ஜெர்மனி



# திருக்குர்ஆன்

وَمَا تُنْفِقُوْنَ اِلَّا ابْتِغَآءَ وَجْهِ اللّٰهِ ؕ وَمَا تُنْفِقُوْا
مِنْ خَيْرٍ يُّوَفَّ اِلَيْكُمْ وَاَنْتُمْ لَا تُظْلَمُوْنَ

நீங்கள் அல்லாஹ்வின் விருப்பத்தை நாடியல்லாமல் செலவு செய்வதில்லை. செல்வத்திலிருந்து நீங்கள் எதைச் செலவு செய்தாலும் அது முழுமையாக உங்களுக்குத் திருப்பித் தரப்படும். மேலும் உங்களுக்கு அநீதி இழைக்கப்பட மாட்டாது. (2:273)

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ ؕ
وَمَا تُنْفِقُوْا مِنْ شَىْءٍ فَاِنَّ اللّٰهَ بِهٖ عَلِيْمٌ

நீங்கள் உங்களுக்கு விருப்பமான பொருள்களிலிருந்து, (இறைவனுக்காகச்) செலவு செய்யாத வரையில் உங்களால் ஒருபோதும் முழுமையான நன்மையினைப் பெற முடியாது. நீங்கள் எப்பொருளைச் செலவு செய்கின்றீர்களோ அதனை நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிகின்றான். (3:93)



# ஹதீஸ்

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ، أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ
عَلَيْهِ وَسَلَّمَ قَالَ مَا مِنْ يَوْمٍ يُصْبِحُ العِبَادُ فِيهِ،
إِلَّا مَلَكَانِ يَنْزِلَانِ، فَيَقُولُ أَحَدُهُمَا:
اللَّهُمَّ أَعْطِ مُنْفِقًا خَلَفًا، وَيَقُولُ الآخَرُ:
اللَّهُمَّ أَعْطِ مُمْسِكًا تَلَفًا

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அடியார்கள் காலையில் எழும் பொழுது இரண்டு மலக்குமார்கள் இறங்காத எந்த ஒரு நாளும் இல்லை. அதில் ஒருவர், அல்லாஹ்வே! செலவு செய்யக்கூடியவருக்கு இன்னும் வழங்குவாயாக! என்று கூறுகிறார். இன்னொருவர், அல்லாஹ்வே! கருமியின் செல்வத்தை இழப்பிற்குரியதாக்கு –வாயாக! என்று கூறுகிறார். (நூல்: புகாரி)

عَنْ خُرَيْمِ بْنِ فَاتِكٍ قَالَ رَسُولُ اللهِ
صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ مَنْ أَنْفَقَ نَفَقَةً
فِي سَبِيلِ اللهِ كُتِبَتْ لَهُ بِسَبْعِ مِائَةِ ضِعْفٍ

ஹஸ்ரத் ஹுரைம் இப்னு ஃபாதிக் அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் அல்லாஹ்வின் வழியில் எதையேனும் செலவு செய்தால் (அவருக்கு) அதற்குப் பதிலாக எழுநூறு மடங்கு அதிக நன்மை கிடைக்கிறது. (நூல்: திர்மிதி)

## ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் 09.09.2023 அன்று ஜெர்மனியின் ஃபிராங்கெந்தலிலுள்ள நூர் பள்ளிவாசலைத் திறந்து வைத்த பிறகு சிறப்பு விருந்தினர்களுக்கு ஆற்றிய உரை





**தமிழாக்கம்: இப்னு வஸீம்**

அனைத்து கண்ணியத்திற்குரிய உறுப்பினர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு.

இன்று இங்கு கருத்துகளை வெளிப்படுத்தக்கூடிய பல்வேறு மக்கள் வருகை தந்துள்ளார்கள். நான் அவர்களில் எல்லாருக்கும் முதலாக மதிப்பிற்குரிய தாவூத் முஜவ்கே சாஹிப் அவர்களிடம் - அவர்கள் நம்முடைய தேசிய அமீர் அவர்களின் பிரதிநிதியாக இன்று வந்துள்ளார்கள். அமீர் சாஹிப் அப்துல்லாஹ் வாகஸ் ஹாவுஸர் சாஹிப் அவர்கள் இங்கு ஜெர்மனியின் உள்ளூர்வாசியாவார்கள். அவர்களது உடல் நலம் சரியில்லை. உடல் நலக் குறைவு இருந்தது. எனவே, அவர்களால் வர முடியவில்லை.

எவ்வாறாயினும், அவர்களுடைய பிரதிநிதியாக (மதிப்பிற்குரிய தாவூத் முஜவ்கே சாஹிப்) அவர்கள் சிறிது கருத்து பரிமாற்றம் செய்தார்கள். ஃபிரன்கட் ஹாலின் வரலாற்றைப் பற்றியும் சிறிது கூறினார்கள். படைப்பினங்களுக்குத் தொண்டாற்றுதல் குறித்து பேசப்பட்டது. படைப்பினங்களுக்குத் தொண்டாற்றுதல் என்பது நம்முடைய ஒரு சமூகப் பொறுப்பு மட்டுமல்ல. அதையும் தாண்டி, இது நம்முடைய மார்க்கக் கடமையுமாகும்.

இஸ்லாத்தில், 'நீங்கள் படைப்பினங்களுக்குத் தொண்டாற்றும் பணியை செய்யுங்கள். மேலும், இழப்பிற்குரியவர்கள், இயலாதவர்கள் மற்றும் தேவையுடையவர்களுக்குத் தொண்டாற்றுங்கள். நகரத்தில் உள்ள மக்களுக்குத் தொண்டாற்றுங்கள். இதை செய்வீர்களாயின் உங்களுடைய இறைவணக்கங்களின் தரமும் உங்கள் இறைவனுக்குப் பிடித்தமானவையாக இருக்கும். பிறகு, இறைவன் இப்படிப்பட்ட விஷயங்களை ஏற்றுக் கௌ்வான்' என்று கட்டளையிடப்பட்டுள்ளது.

இன்னும் கூறுவதாயின், திருக்குர்ஆனில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: நீங்கள் மக்களுடைய உரிமைகளை செலுத்தக்கூடியவர்கள் இல்லையாயின், தேவையுடையவர்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடியவர்கள் இல்லையாயின், அநாதைகள் மீது அக்கறை காட்டுபவர்கள் இல்லையாயின், மக்களுக்குப் பலனளிக்கக்கூடிய எல்லா வித நன்மைகளையும் நிறைவேற்றுபவர்கள் இல்லையாயின், பிறகு உங்களுடைய இறைவணக்கங்களும் ஏற்றுக் கொள்ளப்படாது. அவை திருப்பி அனுப்பப்படும்.

ஆக, இதுதான் நமது போதனை ஆகும். இந்தப் போதனை இருக்கும் போது எவர்களுக்குப் புரிந்து விடுகிறதோ அவர்கள், இந்த விஷயங்களை வெளிப்படுத்தக்கூடிய அந்த நபரை அல்லது அந்த ஜமாஅத்தை எதிர்ப்பது என்பது சாத்தியமற்றது.

எனவே, தாவூத் சாஹிப் அவர்கள் கூறினார்கள்: ஒன்று மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்னவென்றால், இயல்பாக இந்த நகரத்தில் இந்த ஒழுக்கமுடைமை தென்படுகிறது. அதாவது, நகர மக்கள் தேவையில்லாமல் எதிர்க்கக் கூடியவர்கள் அல்ல. இரண்டாவது யாருடைய உள்ளத்திலாவது சிந்தனை வந்தாலுமே அவர்களில் யாரும் நான் எதிர்ப்பேன் என்று கூறவில்லை. அல்லது நமக்கு (மற்ற) சில இடங்களில் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டி வந்து, நமக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்பட்டு, பிறகு, அங்கிருந்து நீதிமன்றங்கள் நமக்கு சாதகமாக தீர்ப்புகள் வழங்கின. அது போன்று (இங்கு) இல்லை. மாறாக, அந்த அண்டை வீட்டுக்காரர், 'நான் இங்கிருந்து வீட்டை விட்டு விட்டு எங்காவது சென்று விட நினைத்தேன்' என்று கூறினார்.

எவ்வாறு இருப்பினும், நகர மக்களின் இந்த சிந்தனை உள்ளதே, இதன் அடிப்படையில் நான் நகர மக்களுக்குப் பெரும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். உதவி புரிந்த கவுன்ஸிலுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேயர் சாஹிப் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நன்றி தெரிவித்தல் எங்களுடைய மார்க்கக் கடமையாகும். ஏனென்றால், எவர் மக்களுக்கு நன்றி

செலுத்தக்கூடியவர் இல்லையோ அவர் இறைவனுக்கும் நன்றி செலுத்தக்கூடியவராக இருக்க முடியாது என்று இஸ்லாம் எங்களுக்குப் போதனை வழங்கியுள்ளது. இந்த வகையில் நாங்கள் நன்றி தெரிவிக்கும் போது வெறும் சம்பிரதாயமாக நன்றி தெரிவிப்பதில்லை. மாறாக, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக் கூடியவர்களாக ஆக வேண்டும் என்பதற்காக நன்றி தெரிவிக்கிறோம்.

இதுவே ஓர் உண்மையான முஸ்லிமின் கடமையாகும். அதாவது, அவர் தனது மனப்பாங்கை இது போன்றதாகக் கொள்ள வேண்டும். இது போன்று தனது வாழ்வைக் கழிக்க வேண்டும். இதன் மூலம் அவர் தன்னைப் படைத்தவனைத் திருப்திபடுத்தக் கூடியவராக இருப்பார்.




அண்டை அயலாருக்கான உரிமைகளைப் பற்றி எந்த அளவுக்குக் கூறப்பட்டுள்ளது என்றால், அதைப் பற்றி நான் பல இடங்களில் கூறியிருக்கிறேன். இப்பொழுது உங்களுக்கும் கூறி விடுகிறேன். இஸ்லாத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் மனிதர்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் எந்த அளவுக்கு உள்ளன என்றால், நீங்கள் அவற்றை நிறைவேற்றா விட்டால் பாவம் செய்தவர்களாக ஆகி விடுவீர்கள்.

இன்னும் கூறுவதாயின், சஹாபா பெருமக்கள் இவ்வாறு தமது (கருத்தை) வெளிப்படுத்துகிறார்கள்: அன்னார் எங்களுக்கு அண்டை அயலாருக்கான உரிமைகள் பற்றி எந்த அளவுக்கு வலியுறுத்திக் கூறினார்கள் என்றால், நாங்கள் அண்டை அயலார் எங்களுடைய சொத்திலும் உரிமை -யாளர்கள் ஆகிவிடப்போகிறார்கள் என்று நினைத்தோம்.

உங்களுடைய அண்டை அயலாரைக் கருத்தில் கொள்ளுங்கள் என்று திருக்குர்ஆனும் போதிக்கிறது. பிறகு, அண்டை அயலாருக்குப் பெரிய இலக்கணம் வகுத்துள்ளது. உங்களுடைய வீட்டிற்கு அருகில் வாழ்பவர்கள் அண்டை அயலார் ஆவார்கள். உங்களுடன் பயணம் செய்பவர்கள் உங்கள் அண்டை அயலார் ஆவார்கள். உங்களுடன் சேர்ந்து பணியாற்றுபவர்கள் உங்கள் அண்டை அயலார் ஆவார்கள். உங்களுக்குக் கீழ் பணியாற்றுபவர்களும் அதே வகையில் வருகிறார்கள். எனவே, இவர்கள் அனைவருடனும் அவர்களுக்கு உரிமையான வகையில் நடந்து கொள்வீராக.

வீடுகள் என்பதுமே பக்கத்து வீடுகள் மட்டும் இல்லை. அவற்றையும் தாண்டி நாற்பது வீடுகள் வரை அண்டை அயலார் ஆவார்கள். அண்டை அயலார் என்பதை இந்த அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில், எந்த வகையான சலனம், குழப்பம் உருவாவதற்கான பேச்சுக்கே இடமில்லை. எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் தான் எங்கு சென்றாலும் இந்த அளவு ஆழமாக சென்று தனது அண்டை அயலாருக்கான உரிமையை செலுத்த வேண்டியது அவர் கடமையாகும்.

சுகாதார அமைச்சகத்தின் மாநில செயலாளர் வந்திருந்தார்கள். அவர்களும் மிகவும் நல்ல விஷயங்களைக் கூறினார்கள். அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் நம்மிடம் எந்த விஷயங்களைக் கூறினார்களோ உண்மையான இஸ்லாமும் இதுதான். அதாவது, ஒரு நாட்டின் குடிமக்கள் அந்த நாட்டுக்கு முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும். நாட்டுக்காக எல்லா விதமான தியாகங்களையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும்.

இன்னும் சொல்வதாயின், இஸ்லாத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நமக்கு, 'நாட்டுப் பற்று ஈமானின் ஒரு பகுதியாகும்' என்று கூறியுள்ளார்கள்.

எனவே, ஈமான் அடிப்படையிலும் நாம் நாட்டை நேசிக்க வேண்டியது அவசியம் ஆகும். நாட்டின் மீது நேசம் இருக்கும் போது, அதற்காக மனிதன் எல்லா விதமான தியாகங்களையும் செய்வான் என்பது வெளிப்படையாகும். எனவே, உண்மையான முஸ்லிம்கள் இங்கு வந்துள்ளார்கள் இங்கு குடியேறி, இந்த நாட்டின் அங்கமாக ஆகி, இந்த நாட்டில் இருந்து பலன் பெறக்கூடியவர்களாக ஆகியுள்ளார்கள் அவர்கள் பலன் மட்டும் பெறுகிறார்கள் அதற்காக தியாகங்களை செய்யக் கூடியவர்கள் இல்லை என்றால், அவ்வாறு இருக்கக் கூடாது. மாறாக, நேசத்தின் எதிர்பார்ப்பாவது எதை நேசிக்கிறோமோ அதற்காகத் தியாகங்களும் செய்ய வேண்டும்.

மேலும், அது எங்களை, "நாங்கள் சட்டத்தைப் பேண வேண்டும். எல்லா வகையிலும் நாட்டின் சட்டத்தைக் கடைபிடிக்க வேண்டும். நாட்டில் அமைதி, சமாதானம் மற்றும் சமரசத்திற்கான சூழலை உருவாக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அண்டை அயலாருக்கான உரிமைகளையும் செலுத்த வேண்டும். சட்டத்திற்கான உரிமையை நிறைவேற்றவும் வேண்டும்" என்று நிர்பந்திக்கிறது.

இவ்வாறே, நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் அமைதியைப் பற்றி பேசினார்கள். நிச்சயமாக இந்தக் காலத்தில் அமைதி மிகவும் அதிகமாக தேவைப்படுகிறது. எங்களுக்கு அனுமதி வழங்கியதற்காக நாங்கள் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். நிச்சயமாக நாம் அமைதியை விரும்புபவர்கள்; அமைதியைப் பரப்புபவர்கள் என்பதை எண்ணியே அவர்கள் இந்த அனுமதியை வழங்கியிருப்பார்கள்.

பள்ளிவாசல் கட்டுவதற்கான நோக்கமே என்ன -வென்றால், எங்கு நீங்கள் ஓரிறைவனை வணங்குகிறீர்களோ அங்கு அவனுடைய படைப்பினங்களுக்கான உரிமைகளையும் செலுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். நான் துவக்கதில் கூறியது போன்று, படைப்பினங்களுக்கான உரிமை நிறைவேற்றப்படுவதில்லை என்றால், இறைவணக்கங்கள் பலனற்றவையாகும். இது போன்ற உங்களுடைய

இறைவணக்கங்களை நான் பொருட்படுத்துவதில்லை என்று அல்லாஹ் கூறுகிறான்.

எனவே, இப்படிப்பட்ட சிந்தனை இருக்கும்போது அமைதி, சமரசம் மற்றும் சமாதானத்திற்கான தூதுச் செய்தியும் இப்படிப்பட்ட நபரிடமிருந்தே அல்லது இப்படிப்பட்ட ஜமாஅத்திடமிருந்தே கிடைக்கும் என்பது வெளிப்படை.

பள்ளிவாசலுக்கு நூர் பள்ளிவாசல் என்று பெயரிடப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினரும் இதைப் பற்றி கூறினார். அல்லாஹ் வானம் மற்றும் பூமியின் ஒளியாவான் என்று திருக்குர்ஆனும் கூறுகிறது. ஆக, அல்லாஹ் வானம் மற்றும் பூமியின் ஒளியாக இருக்கும்போது நமக்கான இரண்டாவது கட்டளையாவது, அல்லாஹ்வின் பண்புகளை, மார்க்கத்தோடு தொடர்புடைய ஒரு மனிதன் மேற்கொள்ள வேண்டும். எனவே, அல்லாஹ் அந்த ஒளியாக இருக்கும்போது, அல்லாஹ்வின் பண்பாக உண்மையான ஒவ்வோர் அஹ்மதி முஸ்லிமும் அந்த ஒளியை அடுத்தவர்கள் வரை பரப்ப வேண்டும்.

அந்த ஒளி என்னவென்றால், அல்லாஹ்விற்கான உரிமையைச் செலுத்தியவாறு அவனை வணங்குவதற்கான உரிமையைச் செலுத்த வேண்டும். அவனுடைய போதனை -கேற்ப செயலாற்றியவாறு உண்மையான இஸ்லாமிய போதனை என்ன, மார்க்கம் என்ன என்று உலகிற்குக் கூற வேண்டும். மார்க்கம் சச்சரவுகள், மனக்கசப்புகள் மற்றும் சண்டைகளுக்கான போதனையை வழங்குவதில்லை. மார்க்கமோ அமைதி, சமாதானம், அன்பு மற்றும் நேசம் ஆகியவற்றிற்கான போதனையை வழங்குகிறது.

எனவே, இந்த சிந்தனை வந்து விடும்போது, இத்தகைய சிந்தனையுடன் அமைதியைத் தவிர வேறு எதுவும் தென்படவே முடியாது. எனவே, இதுவே நமது சிந்தனை -யாகும். இந்த அடிப்படை விதிப்படியே நாங்கள் நடப்பதற்கு முயற்சி செய்கிறோம். இந்தப் போதனைப்படியே நாங்கள் செயல்படுவதற்கு முயற்சி செய்கிறோம்.

லார்டு மேயர் சாஹிப் அவர்களும் அமைதி எனும் சொல்லைக் கொண்டு பேசினார்கள். பிறகு, பள்ளிவாசல் தொடர்பாகவும் பேசினார்கள். நான் பெரும்பாலும் கூறி வருகிறேன். இன்று நான் மீண்டும் இங்கும் கூறி விடுகிறேன், பள்ளிவாசலுக்கு வரக்கூடியவர், உண்மையான முஸ்லிம், இஸ்லாமிய போதனைகளின்படி செயல்படக்கூடிய ஒருவர் ஏன் அமைதியாக வாழ்கிறார்? ஏன் ஒவ்வொரு மார்க்கத்திற்கும் கண்ணியம் அளிக்கிறார்?

முதல் விஷயமாவது, நாங்கள் ஒவ்வொரு மார்க்கமும் உண்மையானது என்றும், ஒவ்வொரு மார்க்கத்தின் தோற்றுநரும் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து வந்தார் என்றும், ஒவ்வொரு மார்க்கமும் அமைதி மற்றும் அன்பின் போதனையைப் பரப்புவதற்காக வந்தது என்றும் நம்பிக்கை கொள்கிறோம்.

பிறகு, எங்காவது இஸ்லாத்தில் போர் புரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றால், அது எதற்காக என்று திருக்குர்ஆனில் அதைப் பற்றி தெளிவாக எழுதப்பட்டுள்ளது. அதற்கான காரணங்கள் உள்ளன. ஒரு நீண்ட கால துன்புறுத்தலுக்குப் பிறகு, இஸ்லாத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் முஹம்மத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு வந்தார்கள். அப்போது நிராகரிப்பாளர்கள், சிலை வணக்கம் செய்தவர்கள் அங்கும் அன்னாரைப் பின்தொடர்ந்தார்கள்.

அப்பொழுது திருக்குர்ஆனில் இவ்வாறு கட்டளை இறங்கியது: இப்பொழுது இவர்கள் மேற்கொண்ட அதே வழிமுறைப்படி இவர்களுக்கு பதிலடி கொடுங்கள். இவர்கள் போர் புரிந்தால், நீங்களும் போர் புரியுங்கள். பிறகு, எதற்காக செய்ய வேண்டும் என்று அதை விளக்கியும் உள்ளது. இதையும் திருக்குர்ஆன் தெள்ளத்தெளிவாக இவ்வாறு எழுதி விட்டது:

இந்தக் கைகளைத் தடுத்து நிறுத்தவில்லை என்றால், உலகில் எந்த மார்க்கமும் எஞ்சியிருக்காது. எந்த ஒரு தேவாலயமும் எஞ்சியிருக்காது. எந்தவொரு யூத வழிபாட்டுத்தலமும் எஞ்சியிருக்காது. எந்தவொரு கோயிலும் எஞ்சியிருக்காது. எந்தவொரு பள்ளிவாசலும் எஞ்சியிருக்காது. எனவே, பள்ளிவாசல் உருவாகும்போது அத்துடன் நமக்கு



இந்தப் போதனையும் கிடைக்கிறது. நாம் மற்ற மதங்களின் கட்டடங்களையும் பாதுகாக்க வேண்டும். அவர்களுடைய வழிபாட்டுத்தலங்களையும் பாதுகாக்க வேண்டும். எனவே, இதுவே ஓர் உண்மையான முஸ்லிமின் சிந்தனையாக இருக்க வேண்டும். இது இல்லையென்றால், அவரிடம் இஸ்லாத்தின் போதனையின் உண்மையான வெளிப்பாடு இல்லை.

ஆக, இங்கு லார்டு மேயர் சாஹிப் அவர்கள் நூர் பள்ளிவாசல் தொடர்பாக மீண்டும் கவனமூட்டினார்கள். இந்த வகையில் நான் நம் அஹ்மதிகளிடமும் கூறுவேன். இந்த விஷயத்தை உங்கள் அனைவருக்கு முன்னாலும் வெளிப்படுத்தி விடுகிறேன். இப்பொழுது இந்தப் பெயரைக் காப்பாற்றுவது நமது பணியாகும். இந்தப் பள்ளிவாசல் மூலமாக இந்தப் பகுதியில் ஒளியைப் பரப்புவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இஸ்லாத்தின் போதனையான அமைதி மற்றும் சமரசம் குறித்து உலகிற்குக் கூறுங்கள். அதில் நிலைநிறுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். இன்றைய நாள்களில், இந்தக் காலத்தில் அமைதியின் தேவை மிகவும் அதிகமாக உள்ளது. அமைதி மிகவும் அதிகம் தேவைப்படுகிறது.

போர்களிலிருந்து தப்பிப்பதற்கான தேவையுள்ளது. நாம் மிக வேகமாகப் போரை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். எனவே, நாம் மிகவும் அதிகமாக யோசிக்க வேண்டும்.

அதிலிருந்து தப்பிப்பதற்கான வழிவகைகள் இவையே ஆகும். அதாவது, நாம் சமூகத்தில் ஒருவர் மற்றவருக்கான உரிமை -களைச் செலுத்ததக் கூடியவர்களாக இருக்க வேண்டும். நமது சமூகத்தில் எல்லா வகையான பயங்கரவாதத்தை விட்டும், அநீதிகளை விட்டும் தூய்மையானவர்களாக இருக்க வேண்டும்.

திருக்குர்ஆனோ நமக்கு, ‘எந்த ஒரு சமுதாயத்தின் பகைமையும் உங்களை நீதியை விட்டு விலக்கி விட வேண்டாம். நீதியை நிலைநாட்டுங்கள். இதுவே இறையச்சம் ஆகும்’ என்று கட்டளையிடுகிறது.

எனவே, நாம் இந்தப் போதனைப்படி செயல்படும்போது, அதன் மூலம் அமைதியின் போதனை பரவும். அதன் மூலம் சுற்றுச் சூழலில், சமூகத்தில் அமைதி மற்றும் சமாதானத்திற்கான வெளிச்சத்தை அளிக்கக்கூடிய அந்த ஒளி பரவும். முன்னேற்றமடைந்த நாடுகளுக்கு செல்லுங்கள். மூன்றாம் உலக நாடுகளுக்கு செல்லுங்கள். அங்கு நாங்கள் பள்ளிவாசல்கள் கட்டுகின்ற அதே வேளையில், எந்தப் பாகுபாடுமின்றி ஒவ்வொரு மதம் மற்றும் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்குத் தொண்டாற்றுகிறோம்.



அங்கு நாங்கள் பள்ளிக்கூடங்களையும் திறந்துள்ளோம். மருத்துவமனைகளையும் திறந்துள்ளோம். வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்காக Modern Village -களையும் உருவாக்கியுள்ளோம். குடிப்பதற்கான தண்ணீரையும் கிடைக்கச் செய்வதற்கு முயற்சி செய்கிறோம். உலகில் மக்களுக்கு வசதிகள் கிடைக்கக்கூடிய சூழல் உருவாகும் பொருட்டு, நாங்கள் இவ்வாறு தொண்டு செய்கிறோம்.

உலகில் வசதிகள் கிடைத்து விடும்போது, உலகில் ஒருவர் மற்றவருக்கான உரிமைகளை செலுத்துவதன் பக்கம் கவனம் ஏற்பட்டு விடும்போது, பிறகு, சிந்தனை மாறி விடுகிறது. பிறகு, சண்டை சச்சரவின் பக்கம் சிந்தனை செல்வதில்லை. மாறாக, அமைதி, அன்பு மற்றும் நேசத்தின் பக்கம் சிந்தனை செல்கிறது. இதற்காகத்தான் நாங்கள் இந்தப் பணியைச் செய்கிறோம்.

ஒருவர் முஸ்லிமா, இல்லையா என்பதைப் பார்க்காமல், நாங்கள் இந்த சிந்தனையைக் கொண்டிருக்கிறோம். அதாவது, நாம் இந்த ஒளியை மற்றவர்களின் உள்ளத்தில் எந்த வித பேராசையுமின்றி எட்ட வைக்கக் கூடியவர்களாக இருக்கும் போதுதான் உண்மையான ஒளி வெளிப்பட முடியும். அவர்களிடம் அல்லாஹ்வின் மீதான அன்பு உருவாக வேண்டும் அவர்கள் இறைவனைப் புரிய வேண்டும். தம்மைப் படைத்தவனை அடையாளம் காண வேண்டும் என்பதுதான் நமது நோக்கம் ஆகும்.

இது மிகப் பெரிய நோக்கம் ஆகும். இதற்காகத்தான் நாங்கள் முயற்சி செய்கிறோம். ஆனால், அத்துடன் இதற்காக எங்களுக்கு எந்தப் பேராசையும் கிடையாது. நாங்கள் எந்த சொந்தப் பலனையும் பெற வேண்டும் என்பது கிடையாது. நோக்கம் இருக்கிறது என்றால், அடியான் தன்னைப் படைத்தவனை அடையாளம் காண வேண்டும் என்பது மட்டும் தான் நோக்கமாகும்.

அவன் தன்னைப் படைத்தவனை அடையாளம் காணத் துவங்கும்போது, அவன் உலக சுக போகங்கள், உலக விருப்பங்கள் மற்றும் உலக ஆசைகள் ஆகியவற்றின்படி அதிகம் செயல்பட முயற்சி செய்ய மாட்டான். அல்லது அவற்றிற்கு ஆசைப்பட அதிகம் முயற்சி செய்ய மாட்டான். மாறாக, அவன் மரணித்த பிறகுள்ள வாழ்விலும் என்னுடைய முடிவு நல்லதாக அமையும் பொருட்டு, நான் என்னைப் படைத்தவனை அடையாளம் கண்டு, அவன் கூறிய விஷயங்கள்படி அமல் செய்து, அவனை அறிந்து அவனுடைய நேசத்தைப் பெற முயற்சி செய்வேன் என்று விரும்புவான்.

அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த நோக்கத்தைப் பெறுவதற்கு எல்லா இடத்திலும் முயற்சி செய்கிறது.

மேயர் சாஹிப் அவர்கள், ‘இந்த நகரம் அமைதி நகரமாக ஆகி விட வேண்டும் உங்களுடைய நடைமுறையும் இங்கு அமைதியானதாக இருக்க வேண்டும். மேலும், நகர வாழ் மக்கள் ஒவ்வொருவரும் அமைதியாக வாழ வேண்டும்’ என்று துஆ செய்தார்கள்.

நானும் இந்தத் துஆவையே செய்கிறேன், இந்த நகரம் மட்டும் அமைதியுடன் வாழ்வதாக அல்லாமல், அதையும் தாண்டி இந்த நாடும் ஒவ்வொரு நகர வாழ் மக்களும் அமைதியுடன் வாழும் வண்ணம் ஆகி விடட்டுமாக! அதையும் தாண்டி இந்த உலகமும் அமைதி உள்ள இடமாக மாறி விடட்டுமாக!

இன்றைய நாள்களில் உலகில் நடக்கும் போர்களால் மிக பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்த முடியும். இவைப் பரவிக் கொண்டே சென்றால் - இது பரவிக் கொண்டே செல்வதற்கான சாத்தியமும் மிகத் தெளிவாக உள்ளது. பிறகு, பயங்கரமான விளைவுகள் ஏற்படும். அடுத்து, போர்களில் பயன்படுத்தப்படும் சாத்தியமுள்ள, நம்மிடமுள்ள ஆயுதங்கள், வரக்கூடிய நம்முடைய வருங்கால சந்ததிகளை

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்...)

# 700 இறை கட்டளைகள்

(தொகுப்பு: ஹனீஃப் அஹ்மது மஹ்மூது)

தமிழாக்கம்: இப்னு யூசுஃப்

5

### அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டுதல் மேலும் அவ்வாறு இட்டு கட்டுபவரின் தோல்வி மற்றும் வெற்றியின்மை

قَالَ لَهُمْ مُّوْسٰى وَيْلَكُمْ لَا تَفْتَرُوْا عَلَى اللّٰهِ كَذِبًا فَيُسْحِتَكُمْ بِعَذَابٍ ۚ وَقَدْ خَابَ مَنِ افْتَرٰى

(அப்போது) மூஸா அவர்களிடம்: (மக்களே!) உங்களுக்கு அழிவே. அல்லாஹ்வுக்கு எதிராகப் பொய்யை இட்டுக் கட்டாதீர்கள். (ஏனெனில்) அவ்வாறு செய்தால், அவன் உங்களை ஏதேனும் தண்டனையின் மூலம் அழித்து விடலாம். (இறைவன் மீது) பொய்யைப் புனைந்து கூறுபவன், நிச்சயமாகத் தோல்வியடைவான் என்று கூறினார். (தாஹா 20:62)

فَمَنْ اَظْلَمُ مِمَّنِ افْتَرٰى عَلَى اللّٰهِ كَذِبًا لِّيُضِلَّ النَّاسَ بِغَيْرِ عِلْمٍ ؕ اِنَّ اللّٰهَ لَا يَهْدِى الْقَوْمَ الظّٰلِمِيْنَ

அறிவின்றி மக்களை வழிதவறச் செய்வதற்காக, வேண்டுமென்றே அல்லாஹ்வின் மீது பொய்யை புனைந்து கூறுபவனை விட மிக்க அநீதி இழைப்பவன் எவன்? நிச்சயமாக அல்லாஹ் அநீதி இழைப்பவர்களுக்கு வழிகாட்டுவதில்லை. (அல் அன்ஆம் 6:145)

قُلْ اِنَّ الَّذِيْنَ يَفْتَرُوْنَ عَلَى اللّٰهِ الْكَذِبَ لَا يُفْلِحُوْنَ ؕ

நீர் (அவர்களிடம்) அல்லாஹ் மீது பொய்யைப் புனைந்து கூறுபவர்கள் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை என்று கூறுவீராக. (யூனுஸ் 10:70)

❖❖ 7:38, 10:18, 11:19, 18:16, 29:69, 45:8, 61:8, 72:6, 39:33

### இறைவன் மீது இட்டு கட்டி கூறுவதற்கான தண்டனை மற்றும் நபியின் உண்மை துவத்திற்கான சான்று

وَلَوْ تَقَوَّلَ عَلَيْنَا بَعْضَ الْاَقَاوِيْلِ ۙ لَاَخَذْنَا مِنْهُ بِالْيَمِيْنِ ۙ ثُمَّ لَقَطَعْنَا مِنْهُ الْوَتِيْنَ ۖ فَمَا مِنْكُمْ مِّنْ اَحَدٍ عَنْهُ حٰجِزِيْنَ . وَاِنَّهٗ لَتَذْكِرَةٌ لِّلْمُتَّقِيْنَ

அவர் எந்தச் சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக எம்மீது சுமத்தியிருந்தால் நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். பின்னர் நிச்சயமாக நாம் அவருடைய கழுத்துப் பெருநரம்புக் குழாயைத் துண்டித்திருப்போம். உங்களுள் எவராலும் அவரை (எம்முடைய தண்டனையிலிருந்து) காப்பாற்ற இயலாது. நிச்சயமாக (க் குர்ஆனாகிய) இது, இறையச்சமுடையவர்களுக்கு நினைவூட்டுதலாகும். (அல் ஹாக்கஹ் 69:45-49)

اَمْ يَقُوْلُوْنَ تَقَوَّلَهٗ ۚ بَلْ لَّا يُؤْمِنُوْنَ ۚ

அல்லது அவர் இதனை இட்டுக்கட்டிக் கூறியுள்ளார் என்று அவர்கள் கூறுகின்றனரா? அவ்வாறன்று. மாறாக அவர்கள் (இறையறிவிப்பின் மீது) அறவே நம்பிக்கை கொள்வதில்லை. (அத்தூர் 52:34)

### இணைவைப்பவர்களுக்கான தண்டனை

اُحْشُرُوا الَّذِيْنَ ظَلَمُوْا وَاَزْوَاجَهُمْ وَمَا كَانُوْا يَعْبُدُوْنَ ۙ مِنْ دُوْنِ اللّٰهِ فَاهْدُوْهُمْ اِلٰى صِرَاطِ الْجَحِيْمِ ۚ وَقِفُوْهُمْ اِنَّهُمْ مَّسْـُٔوْلُوْنَ ۙ

அநீதியிழைத்தவர்களையும், அவர்களின் தோழர்களையும், அவர்கள் வணங்கி வந்தவர்களையும் ஒன்று திரட்டுங்கள் (என நாம் வானவர்களிடம் கட்டளையிடுவோம்). (அதாவது) அல்லாஹ்வையன்றி (அவர்கள் வணங்கி வந்தவர்களை). மேலும், அவர்களை நரகின் வழியில் அழைத்துச் செல்லுங்கள். பின்னர், அவர்களை (அங்கு) நிறுத்தி விடுங்கள். (ஏனெனில்) நிச்சயமாக அவர்கள் கேள்வி கேட்கப்படுவார்கள். (அஸ் ஸாஃப்ஃபாத் 37:23-25)

الَّذِىْ جَعَلَ مَعَ اللّٰهِ اِلٰهًا اٰخَرَ فَاَلْقِيٰهُ فِى الْعَذَابِ الشَّدِيْدِ

இவன் அல்லாஹ்வுடன் வேறு கடவுளை ஏற்படுத்திக் கொண்டான். எனவே அவனைக் கடுந்தண்டனையில் எறியுங்கள். (காஃப் 50:27)



### அல்லாஹ்வை வணங்குதல்

يٰۤاَيُّهَا النَّاسُ اعْبُدُوْا رَبَّكُمُ الَّذِىْ خَلَقَكُمْ وَالَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ۙ

மக்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்களுடைய இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால் நீங்கள் (எல்லாவித ஆபத்துகளிலிருந்தும்) தப்பித்துக் கொள்ளலாம். (அல் பகரா 2:22)

اِنَّ اللّٰهَ رَبِّىْ وَرَبُّكُمْ فَاعْبُدُوْهُ ؕ هٰذَا صِرَاطٌ مُّسْتَقِيْمٌ

நிச்சயமாக அல்லாஹ் என் இறைவனும், உங்கள் இறைவனுமாவான். எனவே நீங்கள் அவனை வணங்குகள். இது நேரான வழியாகும். (ஆலி இம்ரான் 3:52)

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (அஸ் ஸாரியாத் 51:57)

❖❖ 4:37, 5:118, 7:60,66, 10:4, 11:3,62,124, 12:41,13:37, 16:37, 17:24, 19:37, 20:51, 21:26,93, 23:24,33, 27:46,92, 29:17,57, 39:67, 43:65

### அருட்கொடைகளை வழங்குகின்ற அந்த இறைவனை வணங்க வேண்டும்

فَلْيَعْبُدُوْا رَبَّ هٰذَا الْبَيْتِ ۙ الَّذِىْۤ اَطْعَمَهُمْ مِّنْ جُوْعٍ ۙ
وَّاٰمَنَهُمْ مِّنْ خَوْفٍ ؏

எனவே இந்த வீட்டிற்குரிய இறைவனை அவர்கள் வணங்கவேண்டும். அவன் அவர்களுக்கு பசி(யின் வேளையி)ல் உணவளித்தான். மேலும் அச்சத்தி(ன் வேளையி)ல் பாதுகாப்பளித்தான். (அல் குறைஷ் 106:4-5)

### அல்லாஹ்தான் வணக்கத்திற்கு தகுதியானவன்

اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ؕ

(இறைவா!) நாங்கள் உன்னையே வணங்குகிறோம். மேலும் நாங்கள் உன்னிடமே உதவியும் தேடுகிறோம். (அல் ∴பாத்திஹா 1:5)

### (ரப்) பரிபாலிக்கின்ற மற்றும் (ரஹ்மான்) அருளாளனாகிய அல்லாஹ்விற்கு ஸஜ்தா செய்தல்

لَا تَسْجُدُوْا لِلشَّمْسِ وَلَا لِلْقَمَرِ وَاسْجُدُوْا لِلّٰهِ الَّذِىْ
خَلَقَهُنَّ اِنْ كُنْتُمْ اِيَّاهُ تَعْبُدُوْنَ

சூரியனுக்கோ, சந்திரனுக்கோ சிரம் பணியாதீர்கள். நீங்கள் அ(வ்விறை) வனையே வணங்குகிறீர்கள் என்றால், அவற்றைப் படைத்த அல்லாஹ்வுக்கே சிரம் பணியுங்கள். (ஹாமீம் ஸஜ்தா 41:38)

اَلَمْ تَرَ اَنَّ اللّٰهَ يَسْجُدُ لَهٗ مَنْ فِى السَّمٰوٰتِ وَمَنْ فِى الْاَرْضِ وَالشَّمْسُ
وَالْقَمَرُ وَالنُّجُوْمُ وَالْجِبَالُ وَالشَّجَرُ وَالدَّوَآبُّ وَكَثِيْرٌ مِّنَ النَّاسِ ؕ

நீர், வானத்திலுள்ளவர்களும், பூமியிலுள்ளவர்களும், சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், மலைகளும், மரங்களும், விலங்குகளும், மக்களுள் பெரும்பாலாரும் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடப்பதனைக் காண்பதில்லையா? (அல் ஹஜ் 22:19)

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا ارْكَعُوْا وَاسْجُدُوْا وَاعْبُدُوْا رَبَّكُمْ
وَافْعَلُوا الْخَيْرَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ۚ۩

நம்பிக்கை கொண்டவர்களே! குனிந்து, சிரம்பணிந்து, உங்கள் இறைவனை வணங்கி நற்செயலைச் செய்யுங்கள். அப்போது தான் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். (அல் ஹஜ் 22:78)

❖❖ 13:16, 15:99, 16:50, 25:61,65, 96:20

### இறைவனை தூய மனதுடன் வணங்குங்கள்

وَارْكَعُوْا مَعَ الرّٰكِعِيْنَ

இறைவனை தூய மனதுடன் வணங்குபவர்களுடன் சேர்ந்து வணங்குங்கள். (அல் பகரா 2:44)

### அல்லாஹ்வின் பால் குனிய வேண்டும் என்பதற்கான கட்டளை

وَاَنِيْبُوْۤا اِلٰى رَبِّكُمْ وَاَسْلِمُوْا لَهٗ مِنْ قَبْلِ اَنْ يَّاْتِيَكُمُ الْعَذَابُ

மேலும் நீங்கள் உங்கள் இறைவன்பால் திரும்பி விடுங்கள். உங்களிடம் தண்டனை வருவதற்கு முன்னர், நீங்கள் அவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து விடுங்கள். (அஸ் ஸுமர் 39:55)

مُنِيْبِيْنَ اِلَيْهِ

நீங்கள் யாவரும் அவனுக்குப் பணிந்த வண்ணம் (இயற்கை மார்க்கத்தைக் கடைபிடியுங்கள்) (அர் ரூம் 30:32)

وَّاتَّبِعْ سَبِيْلَ مَنْ اَنَابَ اِلَىَّ ۚ

மேலும் நீ என்பால் குனிகின்றவரின் வழியைப் பின்பற்றுவாயாக. (லுக்மான் 31:16)

وَاِلَيْهِ اُنِيْبُ

மேலும் நான் அவனிடமே திரும்புகின்றேன். (அஷ்ஷூரா 42:11)


هُوَ رَبِّىْ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ۚ عَلَيْهِ تَوَكَّلْتُ وَاِلَيْهِ مَتَابِ

அவனே என் இறைவன். அவனையன்றி வணக்கத்-திற்குரியவன் இல்லை. நான் அவனிடமே நம்பிக்கை வைத்துள்ளேன். மேலும் (எப்போதும்) நான் அவனிடமே திரும்புகிறேன். (அர் ர∴து 13:31)

### இறைவனிடமே தம்மை முழுமையாக ஒப்படைத்தல்

وَتَبَتَّلْ اِلَيْهِ تَبْتِيْلًا ؕ

அவனிடமே முழுமையாக (உம்மைப்) பணிவுடன் ஒப்படைத்து விடுவீராக. (அல் முஸ்ஸம்மில் 73:9)




### அனைத்துத் தூதர்களும் ஒரே இறைவனை வணங்க வேண்டும் என்ற கட்டளையைத்தான் கொடுத்துள்ளார்கள்

اِذْ جَآءَتْهُمُ الرُّسُلُ مِنْۢ بَيْنِ اَيْدِيْهِمْ وَمِنْ خَلْفِهِمْ اَلَّا تَعْبُدُوْۤا اِلَّا اللّٰهَ ؕ

(அவர்களின்) தூதர்கள், நீங்கள் அல்லாஹ்வைத் தவிர வேறெதனையும் வணங்காதீர்கள் என்று (கூறியவாறு) அவர்களுக்கு முன்னாலிருந்தும், அவர்களுக்குப் பின்னா-லிருந்தும் அவர்களிடம் வந்தனர். (ஹாமீம் ஸஜ்தா 41:15)

وَسْـَٔلْ مَنْ اَرْسَلْنَا مِنْ قَبْلِكَ مِنْ رُّسُلِنَاۤ اَجَعَلْنَا
مِنْ دُوْنِ الرَّحْمٰنِ اٰلِهَةً يُّعْبَدُوْنَ ؏

அளவற்ற அருளாள(னாகிய இறைவ)னையன்றி வணங்கப்படும் வேறெந்தக் கடவுளரையும் நாம் ஏற்படுத்தி-யுள்ளோமோ என்று உமக்கு முன்னர் நாம் அனுப்பிய எம் தூதர்களிடம் நீர் கேட்பீராக. (அஸ் ஸுக்ரு∴ப் 43:46)

وَاذْكُرْ اَخَا عَادٍ ؕ اِذْ اَنْذَرَ قَوْمَهٗ بِالْاَحْقَافِ وَقَدْ
خَلَتِ النُّذُرُ مِنْۢ بَيْنِ يَدَيْهِ وَمِنْ خَلْفِهٖۤ اَلَّا تَعْبُدُوْۤا اِلَّا اللّٰهَ ؕ
اِنِّىْۤ اَخَافُ عَلَيْكُمْ عَذَابَ يَوْمٍ عَظِيْمٍ

ஆதுடைய சகோதரரை (ஹூதை) நீர் நினைத்துப் பார்ப்பீராக. அவர் தமது சமுதாயத்தினரை மணற்குவியல் -களுக்கிடையே எச்சரித்தார். அவருக்கு முன்னரும், அவருக்குப் பின்னரும் எச்சரிக்கை செய்பவர்கள், “நீங்கள் அல்லாஹ்வையன்றி வேறெவரையும் வணங்காதீர்கள் மாபெரும் ஒரு நாளின் தண்டனையைப் பற்றி நான் உங்களுக்காக அஞ்சுகிறேன்” என்று (கூறிச்) சென்றுள்ளனர். (அல் அஹ்கா.்.ப் 46:22)

وَلَقَدْ بَعَثْنَا فِىْ كُلِّ اُمَّةٍ رَّسُوْلًا اَنِ اعْبُدُوا اللّٰهَ وَاجْتَنِبُوا الطَّاغُوْتَ ۚ

நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள் தீயவர்களை விட்டு விலகுங்கள் என்ற கட்டளையுடன் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் நிச்சயமாக நாம் தூதரை அனுப்பினோம். (அந் நஹ்ல் 16:37)

### வேதம் வழங்கப்பட்டவர்களுக்கு ஏக இறைவனை வணங்க வேண்டும்; மேலும் அவனுக்கு எதனையும் இணையாக்க கூடாது என்பதற்கான கட்டளை

قُلْ يٰۤاَهْلَ الْكِتٰبِ تَعَالَوْا اِلٰى كَلِمَةٍ سَوَآءٍۢ بَيْنَنَا وَبَيْنَكُمْ
اَلَّا نَعْبُدَ اِلَّا اللّٰهَ وَلَا نُشْرِكَ بِهٖ شَيْـًٔا وَّلَا يَتَّخِذَ بَعْضُنَا بَعْضًا
اَرْبَابًا مِّنْ دُوْنِ اللّٰهِ ؕ فَاِنْ تَوَلَّوْا فَقُوْلُوا اشْهَدُوْا بِاَنَّا مُسْلِمُوْنَ

நீர் கூறுவீராக! வேதத்தைவுடையவர்களே! எங்களுக்கும் உங்களுக்குமிடையில் ஒன்றுபட்ட ஒரு கருத்தின்பால் வாருங்கள். (அதாவது) நாம் அல்லாஹ்வை அன்றி வேறவரையும் வணங்கமாட்டோம், அவனுக்கு வேறெதனையும் இணை வைக்க மாட்டோம், அல்லாஹ்வை விட்டு விட்டு நம்முள் சிலர் வேறு சிலரை கடவுள்களாக ஆக்கி கொள்ள மாட்டோம். ஆனால் அவர்கள் புறக்கணித்து விட்டால், நீங்கள் அவர்களிடம், நாங்கள் (இறைவனுக்குக்) கட்டுப்பட்டு நடப்பவர் -களாயிருக்கின்றோம் என்பதற்கு நீங்கள் சாட்சிகளாயிருங்கள் என்று கூறுங்கள். (ஆலி இம்ரான் 3:65)

குறிப்பு: இந்த வசனத்தில் இறுதியில் இந்த ஒரு கட்டளையும் உள்ளது அது என்னவென்றால் அவர்கள் (வேதம் வழங்கப் -பட்டவர்கள்) புறக்கணித்து விட்டால், நீங்கள் அவர்களிடம், நாங்கள் (இறைவனுக்குக்) கட்டுப்பட்டு நடப்பவர்களாயிருக்கின்றோம் என்பதற்கு நீங்கள் சாட்சிகளாயிருங்கள் என்று கூறுங்கள்.

### அல்லாஹ்வை வணங்குவதில் நிலைத்து நிற்க வேண்டும்

رَبُّ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا بَيْنَهُمَا فَاعْبُدْهُ
وَاصْطَبِرْ لِعِبَادَتِهٖ ؕ

வானங்களுக்கும், பூமிக்கும், அவ்விரண்டிற்கும் இடையிலுள்ளவற்றிற்கும் இறைவன் (அவனே). எனவே, நீர் அவனை வணங்குவீராக. மேலும் அவனை வணங்குவதில் என்றென்றும் நிலைத்திருப்பீராக. (மர்யம் 19:66)

وَلَهٗ مَنْ فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ وَمَنْ عِنْدَهٗ لَا يَسْتَكْبِرُوْنَ
عَنْ عِبَادَتِهٖ وَلَا يَسْتَحْسِرُوْنَ ۚ

வானங்களிலும், பூமியிலுமுள்ளவர்கள் யாவரும் அவனுக்கே உரியவர்களாவர். அவனிடமுள்ளவர்கள் அவனை வணங்குவதில் பெருமையடிப்பதுமில்லை. (அதனால்) சோர்வடைவதுமில்லை. (அல் அன்பியா 21:20)

### இறைவனுக்கு முன் உறுதியான பாதத்துடன் நிற்குதல்

قُلْ اِنَّمَاۤ اَنَا بَشَرٌ مِّثْلُكُمْ يُوْحٰۤى اِلَىَّ اَنَّمَاۤ اِلٰهُكُمْ
اِلٰهٌ وَّاحِدٌ فَاسْتَقِيْمُوْۤا اِلَيْهِ وَاسْتَغْفِرُوْهُ ؕ
وَوَيْلٌ لِّلْمُشْرِكِيْنَ ۙ

நீர் கூறுவீராக: நான் உங்களைப் போன்ற மனிதனே. உங்கள் வணக்கத்திற்குரியவன் ஒரே இறைவனேயாவான் என்று எனக்கு இறையறிவிப்பின் மூலம் அறிவிக்கப்படுகிறது. எனவே நீங்கள் அவனிடம் (செல்லும்) நேரான பாதையைக் கைக் கொண்டு, அவனிடம் பாவமன்னிப்புக் கோருங்கள். மேலும் இணைவைப்பவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது. (ஹாமீம் ஸஜ்தா 41:7)

(தொடரும்...)

*(6-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

உடல் ஊனமுற்றவர்களாக ஆக்கி விடும். இயலாத பிள்ளைகள் பிறக்கும். கோடிக்கணக்கான மக்கள் இந்த உலகத்தை விட்டுச் சென்று விடுவார்கள்.

எனவே, இந்த அடிப்படையிலும் நாம் ஒருவர் மற்றவருடன், சிறிய மட்டத்திலும் சரி, பெரிய அளவிலும் சரி, அமைதி, அன்பு மற்றும் சமாதானத்துடன் நடப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய அரசாங்கங்களுக்கும் இதன் பக்கம் கவனமூட்ட வேண்டும். அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் இங்கு அமர்ந்துள்ளார்கள். அவர்களிடமும் இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று நான் கூறுகிறேன். அதாவது, அமைதி மற்றும் சமாதானத்தின் சூழலை உலகில் நிலைநாட்டுங்கள். இவ்வாறு உலகம் எந்தவொரு பெரிய உலகளாவிய போரிலிருந்தும் தப்பியிருக்க முடியும்.

பிறகு, நாம் எதிர்கால சந்ததிகளுக்கும் எப்படிப்பட்ட ஒரு சொத்தை விட்டுச் செல்ல வேண்டும் என்றால், அது முடமான மக்கள் வடிவில் இருக்கக் கூடாது. அது பொருளாதாரத்தின் அழிவின் வடிவில் இருக்கக் கூடாது. அது நகரங்கள் பாழடைந்திருக்கும் வடிவில் இருக்கக் கூடாது. மாறாக, மகிழ்ச்சியின் சூழலாக இருக்க வேண்டும். அதுவும் நாம் படைக்கப்பட்ட நோக்கத்தையும் நாம் புரியும் போதுதான், அந்த சூழலில்தான் நடக்க முடியும். அந்த நோக்கமாவது, நம்மைப் படைத்தவனை அடையாளம் காண வேண்டும். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பும் வழங்குவானாக!

மேலும், நான் இங்கு வாழும் அஹ்மதிகளிடமும் கூறுகிறேன். முன்னரை விட அதிகமாக இந்தத் தூதுச் செய்தியை இந்த நகரத்திலும் பரப்புங்கள். இந்த நாட்டிலும் பரப்புங்கள்.

இவ்வாறே, நான் முதலமைச்சர் சாஹிபா அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் தூதுச் செய்தி அனுப்பினார்கள். மேலும், தம்முடைய உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள். எந்த அன்புடன் அவர்கள் நம்மைப் பற்றி கூறிள்ளார்களோ அல்லாஹ் அவர்களுக்கு இதற்கான நற்கூலியை வழங்குவானாக! நன்றி.

அஸ்ஸலாமு அலைக்கும்.

# இந்திய லஜ்னா இமாயில்லாஹ் உறுப்பினர்களுக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் தூதுச்செய்தி

தமிழாக்கம்: இப்னு வஸீம்

இஸ்லாமாபாத் யூ.கே
MA 16-10-2023

அன்பிற்குரிய இந்திய லஜ்னா இமாயில்லாஹ் உறுப்பினர்களுக்கு

اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهٗ

நீங்கள் உங்களுடைய ஆண்டு இஜ்திமாவை நடத்துவதற்கான நல்வாய்ப்பு பெறுகிறீர்கள். அல்ஹம்து -லில்லாஹ். எல்லாம் வல்ல அல்லாஹ் உங்களுடைய இஜ்திமாவை எல்லா விதத்திலும் வெற்றிகரமானதாகவும், அருளுக்குரியதாகவும் ஆக்குவானாக! அதன் நல்ல விளைவுகளை உருவாக்குவானாக! ஆமீன்.

இந்த சந்தர்ப்பத்தில் தூதுச் செய்தி அனுப்புமாறு என்னிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. நான் இந்த சந்தர்ப்பத்தில் சந்ததிகளுக்குத் தர்பிய்யத் வழங்குவதன் பக்கம் உங்களுக்கு கவனமூட்ட விரும்புகிறேன். அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் பிள்ளைகளுக்குத் தர்பிய்யத் வழங்கும் பொறுப்பை பெண்கள் மீது சுமத்தி இருக்கிறார்கள். நம்முடைய பெண்கள் இறைவனை நேசிப்பவர்கள் என்றால், இறைவன் மீதான அச்சத்தை உள்ளத்தில் கொண்டிருப்பவர்கள் என்றால், அவர்கள் இந்த சுற்று சூழலில், தங்களுடைய சந்ததிகளை சீர்படுத்துவதற்காக மிகவும் கடினமாக உழைக்க வேண்டிய தேவையுள்ளது.

‘இந்தத் தாய்மார்களோ அல்லாஹ்வின் அருள்களைத் திரட்டியவாறு, விலையுயர்ந்த ஒரு மூலதனமாக தங்களுடைய சந்ததிகளை ஜமாஅத்திற்கு வழங்குகிறார்களே’ என்று (மக்கள்) கூறும் வகையில், ஒவ்வோர் அஹ்மதி பெண்ணும் தன்னுடைய முன்மாதிரிகளுடன், துஆக்களுடன் அப்படிப்பட்ட உன்னதமான, உயர்தரமான தர்பிய்யத்தைத் தங்களுடைய சந்ததிகளுக்கு வழங்க வேண்டும். இந்த சந்ததிகள், இந்தப் பிள்ளைகள் ஜமாஅத்தின் அமானிதமாக உங்களிடம் இருக்கிறார்கள். இவர்களுக்கு வழங்கப்பட்ட தர்பிய்யத்தின் விளைவாக இந்தப் பிள்ளைகள் அனைவரும் அல்லாஹ்விற்கு விருப்பத்திற்குரிய செல்வங்களாக (மக்கள்) மாறி விட்டார்கள்.

தம்முடைய தூய சிந்தையின் காரணமாக, உலக அசுத்தங்கள் பக்கம் ஏறெடுத்தும் பார்த்திராத இந்த மக்கள் மீதே எப்பொழுதும் அல்லாஹ்வின் அன்பான பார்வை இருக்கிறது. அவர்களுக்கு TV, Internet ஆகியவற்றின் வீணான, வெட்கக்கேடான, ஆடைகளற்ற, அசுத்தமான நிகழ்ச்சிகள் மீது எந்த ஆர்வமும் இருப்பதில்லை. அவர்களுக்கு ஏதாவது ஆர்வம் இருக்கிறது என்றால், அது அல்லாஹ்வின் அருளைத் தேடுவதற்கான ஆர்வமாகும்.

அல்லாஹ் திருக்குர்ஆனின் அதிகாரம் அல் கஹ்ஃபில் இவ்வாறு கூறுகிறான்:

اَلْمَالُ وَالْبَنُوْنَ زِيْنَةُ الْحَيٰوةِ الدُّنْيَا ۚ وَالْبٰقِيٰتُ الصّٰلِحٰتُ خَيْرٌ عِنْدَ رَبِّكَ ثَوَابًا وَّخَيْرٌ اَمَلًا

இந்த வசனத்தின் மொழியாக்கம் இதுவாகும்: பொருட் செல்வமும், மக்கட் செல்வமும் இவ்வுலக வாழ்வின் அலங்காரமாகும். ஆனால், நிலையான நற்செயல்கள்தான், உமது இறைவனிடத்தில் நற்கூலி கிடைப்பதற்கும் எதிர்காலத்தின் எதிர்பார்ப்புக்கும் சிறந்தவை. (18:47)

இங்கு அல்லாஹ் கூறுகிறான்: நன்மை, நற்செயல்கள், அல்லாஹ்வின் மீதான அச்சம் மற்றும் அவனை வணங்குதல் ஆகியவை நிலையானவையாகும். இந்த உலகில் செல்வத்தை சேமிப்பதற்கு பதிலாக மறுமைக்காக செல்வத்தைத் திரட்டிக் கொள்ளுங்கள். மேலும், கூறுகிறான்:



நீங்கள் இந்த சிந்தனையை உருவாக்கிக் கொள்வீர் -களாயின், இதே பொருள்கள், செல்வங்கள், மகன்கள் மற்றும் பரந்துபட்ட வியாபாரம் ஆகியவை உங்களுக்கு ஒரு சிறந்த சொத்துக்களாக ஆகி விடும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கவுரையாக இவ்வாறு கூறுகிறார்கள்:

இந்த வசனத்தில் اَمَلًا என்பதன் பொருள் சுயமே அமல் செய்யக்கூடிய அந்த நபர் தொடர்பாக சிறந்த விளைவுகள் வெளிப்படுவதாகும். ثَوَابًا என்பதன் பொருள் எதிர்கால சந்ததிகளுக்கு சிறந்த எதிர்பார்ப்புகள் இருப்பதாகும். நல்ல செயல்களின் விளைவுகளும் நல்லவையாக உங்களுக்கும் கிடைக்கும் உங்களுடைய சந்ததிகளுக்கும் கிடைக்கும் என்பது இதன் பொருளாகும். ஏனென்றால், நல்லவர்களின் சந்ததிகளுக்கும் பலனை எட்ட வைப்பது அல்லாஹ்வின் நடைமுறையாகும். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 457)

எனவே, நல்ல முன்மாதிரி மற்றும் நல்ல அறிவுரையைக் கொண்டு உங்களுடைய பிள்ளைகளுக்குத் தர்பிய்யத்

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்...)

# இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் உறுப்பினர்களுக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் தூதுச்செய்தி

தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.,

இஸ்லாமாபாத் யூ.கே
MA 14-10-2023

இந்திய அன்ஸாருல்லாஹ்வின் அன்பிற்குரிய உறுப்பினர்களே!

اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهٗ

உங்களுக்கு உங்களின் ஆண்டு இஜ்திமாவை நடத்துகின்ற நல்வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்து எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அல்லாஹ் இதை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. மேலும் இதன் நல்ல விளைவுகளை ஏற்படுத்துவானாக. ஆமீன்.

இந்த சந்தர்ப்பத்தில் தூதுச் செய்தி அனுப்புமாறு என்னிடம் விண்ணப்பிக்கப்பட்டிருக்கிறது. நான் இந்த சந்தர்ப்பத்தில் உங்களுக்கு சில அவசியமான அறிவுரைகளைக் கூற விரும்புகிறேன்.



அல்லாஹ் உங்களுக்கு மஸீஹ் மற்றும் மஹ்தியின் ஜமாஅத்தில் இணையும் நல்வாய்ப்பை வழங்கி இருப்பது உங்கள் மீது அவன் செய்திருக்கும் அவனது கருணையும், பேரருளும் ஆகும். எனவே நீங்கள் இந்தப் பேரருளுக்கு நன்றி செலுத்த முடிந்த அளவுக்கு நன்றி செலுத்துவது உங்களின் கடமையாகும். மேலும் நன்றி செலுத்து -வதற்கான மிகச் சிறந்த வழிமுறை என்னவென்றால், அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, மிகப் பெரிய மாற்றங்களை உங்களிடம் உருவாக்குங்கள். உங்களின் செயல், நற்பண்பு, பேசும் முறை, நடந்து கொள்ளும் விதம் ஆகியவற்றின் மூலமாக, நாங்கள்தான் இஸ்லாத்தின் சரியான, உண்மையான முன்மாதிரிகளைக் கொண்டவர்கள் ஆவோம் என்பதை நீங்கள் உலகிற்கு நிரூபித்துக் காட்டுங்கள். இவர்கள் அல்லாஹ்வின் சிறப்பான அடியார்கள் ஆவார்கள் என்று தெரியும் அளவுக்கு அல்லாஹ்வுடன் அத்தகைய உயிருள்ள தொடர்பை நீங்கள் ஏற்படுத்துங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் எந்த வகையான தூய மாறுதலைப் பற்றிய நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள் என்பதை நாம் பார்க்கின்றோம். அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

“இரவுகளில் எழுந்து எழுந்து துஆக்களைக் கேளுங்கள். அறையின் கதவை மூடியவாறு தனிமையில் துஆ செய்யுங்கள். நீங்கள் கருணை காட்டப்படுவீர்கள்.” (மல்.ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 272)

மேலும் அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

“பைஅத்தின் உண்மையான நோக்கத்தை நிறைவேற்ற நீங்கள் முயற்சி செய்வது அவசியமாகும். அதாவது இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள் திருக்குர்ஆனை நன்றாக கவனமாக ஓதுங்கள். மேலும் அதைப் பற்றி சிந்தியுங்கள் பின்னர் (அதன்படி) செயல்படுங்கள்.” (மல்.ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 215)

ஆக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று, இறைவணக்கங்கள் செய்யுங் -கள் தொழுகைகளை நிறைவேற்றுங்கள் துஆக்களை செய்யுங்கள் அல்லாஹ் -விடம் அவனது அருளைத் வேண்டுங்கள். பின்னர் அல்லாஹ்விடமிருந்து வழங்கப்பட்ட போதனையைப் புரியுங்கள். மேலும் இந்தப்போதனை நமக்குத் திருக்குர்ஆனிலிருந்துதான் கிடைக்க முடியும். எனவே திருக்குர்ஆனையும் கவனமாகப் படியுங்கள் அதைப் பற்றி ஆழமாக சிந்தித்துப் பாருங்கள். அதில் வழங்கப்பட்டுள்ள கட்டளைகளின்படி செயல்படுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

திருக்குர்ஆனிலும், ஹதீஸிலும் தொழுகையைப் பற்றி மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. மேலும் தொழுகையை நிலைநாட்டுதல் என்பதன் கருத்து, ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுங்கள் என்பதாகும். எனவே ஒவ்வோர் அஹ்மதியும் தம்முடைய பள்ளிவாயில்களை நிரப்புவதும், ஐவேளை தொழுகைகளுக்காக பள்ளிவாயில்களுக்கு வருவதும் அவர் மீது கடமையாகும். அவர், தான் மட்டுமே நற்பண்புடையவராகவும் இறைவணக்கத்தில் ஈடுபடுபவராகவும் இருக்கக் கூடாது. மாறாக, இந்த நன்மையை அவர் தம்முடைய பிள்ளைகளிடமும் உருவாக்க வேண்டும். தம் பிள்ளைகளிடமும் இதே நன்மையை நிலைநாட்டுபவர்தான் சரியான முறையில் இறைவணக்கம் செய்பவர் ஆவார்.

ஒரு நபிமொழி அறிவிப்பில் வருவதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: “மனிதன் மரணித்து விடும்போது அவனுடைய செயல் முடிந்து

விடுகின்றது. ஆயினும் மூன்று வகையான செயல்கள் எத்தகையவை என்றால், அவற்றின் நற்கூலி மரணத்திற்குப் பிறகும் அவருக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஒன்று, அவர் செய்து சென்ற நிரந்தரமாக தொடரும் தருமம். இரண்டாவது, அவர் விட்டுச் செல்லும் அறிவு. அதன் மூலமாக மக்கள் பயன் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். மூன்றாவது, அவருக்குக்காக துஆ செய்து கொண்டிருக்கும் நல்ல பிள்ளை." (சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் வஸிய்யத்)

எனவே ஒவ்வோர் அஹ்மதியும் தன் பிள்ளைகளின் தர்பிய்யத்திற்காக மிகவும் கவனம் செலுத்த வேண்டும்.

இன்னொரு முக்கியமான அறிவுரை கிலா∴பத்துடன் தொடர்பு கொண்டிருப்பது ஆகும். நீங்களும் கிலா∴பத் அமைப்பை எப்போதும் பற்றிப் பிடித்துக் கொண்டிருங்கள். உங்கள் மனைவி மக்களையும் கிலா∴பத் அமைப்பை எப்போதும் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்க வையுங்கள். கிலா∴பத் அமைப்புக்கு மார்க்க முன்னேற்றத்துடன் ஒரு முக்கியமான தொடர்பு இருக்கிறது என்பதையும், அது இஸ்லாமிய ஷரீஅத்தின் ஒரு முக்கியமான பகுதியாகும் என்பதையும், மார்க்க முன்னேற்றம் என்பது கிலா∴பத் இல்லாமல் ஏற்படவே முடியாது என்பதையும், ஜமாஅத்தின் ஒற்றுமை கிலா∴பத் இல்லாமல் நிலைபெறவே முடியாது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். எனவே அஹ்மதிய்யா கிலா∴பத்துடன் உங்களின் தொடர்பை இணையுங்கள். மேலும் கிலா∴பத்தின் அருட்கொடையைப் பெறுபவர்களுடன் இறைவன் செய்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றத் தகுந்த அந்த உரிமையை நிறைவேற்றுவதன் பக்கம் கவனமும் செலுத்துங்கள்.

அல்லாஹ் உங்களுக்கு எனது இந்த அறிவுரைகளின் படி செயல்படுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்.

வஸ்ஸலாம்.

எளியவன்
கையொப்பம்
மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ்

---

*(10-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

வழங்குவதில் சிறப்பாக கவனம் செலுத்துங்கள். குறிப்பாக, இது தாய்மார்களின் பணியாகும். அதாவது, சிறு வயதில் இருந்தே பிள்ளைகளுக்கு இஸ்லாமிய போதனை மற்றும் சமுதாயத்தில் உள்ள தீமைகள் பற்றி எடுத்துக் கூறுங்கள். அப்போதுதான் நம்முடைய சந்ததிகள் மார்க்கத்தில் நிலைத்து நிற்கவும் முடியும் மேலும், பெயர்தாங்கிய முன்னேற்றமடைந்த சமூகத்தின் விஷத்திலிருந்து பாதுகாப்பாகவும் இருக்க முடியும். நீங்கள் அவர்களுக்காக நேரத்தை செலவிடுங்கள். அவர்களுடைய படிப்பின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அவர்களை ஜமாஅத்துடன் இணைப்பதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். பிள்ளைகளுக்கு நல்ல தர்பிய்யத் வழங்கப்படுகின்ற சூழலை உங்களது வீடுகளில் உருவாக்குங்கள். அப்போதுதான் பிள்ளைகள் சமுதாயத்தின் ஒரு நல்ல அங்கமாக மாறி, நாடு மற்றும் சமுதாயத்தின் முன்னேற்றத்தில் பங்கு பெறக்கூடியவர்களாக ஆக முடியும்.

மார்க்க போதனைகளையும் வழக்கங்களையும் முஸ்லிம்களிடமிருந்து முடிவுக்குக் கொண்டு வந்து விட வேண்டும் என்று இஸ்லாத்தின் எதிர் ஆற்றல்கள் மிகவும் கடுமையாக அழுத்தம் கொடுக்கின்றன. ஆனால், நாம் நினைவில் கொள்ள வேண்டும்! இந்தக் காலத்தில் இஸ்லாத்தை மீண்டும் பரப்பும் பணி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்காக நாம் முழுமையாக முயற்சி செய்தாக வேண்டும். இன்னல்களையும் மேற்கொள்ள வேண்டி வரும். இந்த ஷைத்தானிய சூழ்ச்சிகளை எதிர்த்துப் போட்டியிடுவதற்கான துணிவையும் நல்வாய்ப்பையும், எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு வழங்குவதற்காகவும், நமக்கு உதவி புரிவதற்காகவும் நாம் துஆக்களிலும் அழுத்தம் கொடுக்கவும் வேண்டும்.

நான் துஆ செய்கிறேன், அல்லாஹ் உங்களுக்கு சந்ததிகளுக்குத் தர்பிய்யத் வழங்கும் பொறுப்பை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்கு -வானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்.

எளியவன்
கையொப்பம்
மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**
**பைஅத்தின் உண்மையான நோக்கத்தை நிறைவேற்ற முயற்சி செய்வது அவசியமாகும். அதாவது இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். திருக்குர்ஆனை நன்றாக கவனமாக ஓதுங்கள். மேலும் அதைப் பற்றி சிந்தியுங்கள். பின்னர் (அதன்படி) செயல்படுங்கள்.**
**(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 215)**

# இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா உறுப்பினர்களுக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் தூதுச்செய்தி

தமிழாக்கம்: இப்னு வஸீம்

இஸ்லாமாபாத் யூ.கே
MA 08-10-2023

அன்பிற்குரிய இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா உறுப்பினர்களுக்கு

اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهٗ

இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா 'அஹ்மதிய்யத்தின் உயிர்த்தியாகிகள்' எனும் தலைப்பில் இவ்வாண்டு தனது ஆண்டு இஜ்திமாவை நடத்துவதற்கு நல்வாய்ப்பு பெறுகிறது என்பதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

இந்த சந்தர்ப்பத்தில், தூதுச் செய்தி அனுப்புமாறு என்னிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆக, உயிர்த்-தியாகிகளுக்கு இஸ்லாத்தில் மிகப் பெரும் அந்தஸ்து உள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.




அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்: "அல்லாஹ்வின் வழியில் கொல்லப்படுபவர்களை இறந்தவர்கள் எனக் கூறாதீர்கள். மாறாக, அவர்கள் உயிருள்ளவர்களே. ஆனால், நீங்கள் உணர்ந்து கொள்வதில்லை. மேலும், ஓரளவு பயத்தாலும், பசியாலும் செல்வங்கள், உயிர்கள், கனி வகைகள் ஆகியவற்றின் இழப்பாலும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். மேலும், (தூதரே!) நீர் பொறுமையாளர்களுக்கு நற்செய்தியைக் கூறுவீராக. அவர்கள், தங்களுக்குத் துன்பம் ஏற்படும்போது, (பதற்றமடைவதில்லை. மாறாக) நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள் மேலும், நாம் அவனிடமே திரும்பிச் செல்பவர்கள் எனக் கூறுவர்." (2:155-157)

அஹ்மதிய்யா ஜமாஅத்தில் அல்லாஹ்வின் வழியில் உயிர்த்தியாகங்கள் செய்யப்படுகின்றன. அவற்றில் எல்லாவற்றையும் விடப் பெரியதோ ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் காலத்தில் ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீ்.ப் சாஹிப் அவர்கள் முன்வைத்த தியாகமாகும். அந்த சந்தர்ப்பத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்:

நான் மர்ஹூம் மவ்லவி முஹம்மத் அப்துல் லத்தீ்.ப் அவர்கள் காட்டிய அந்த உறுதிப்பாட்டையும் அவர்கள் செய்த அந்த உயிர்த்தியாகத்தையும் பார்க்கும் போது, எனக்கு எனது ஜமாஅத்தைக் குறித்து நம்பிக்கை மிகவும் அதிகரித்து விடுகிறது. ஏனெனில், அந்த இறைவன் இந்த ஜமாஅத்தின் சில நபர்களுக்குப் பொருளை மட்டுமின்றி, அதையும் தாண்டி உயிரையும் இந்த வழியில் அர்ப்பணித்து செல்வதற்கான நல்வாய்ப்பு வழங்கியுள்ளான். சாஹிப்ஸாதா மவ்லவி அப்துல் லத்தீ்.ப் சாஹிப் அவர்களின் ரூஹைக் கொண்டிருக்கக் கூடிய, ஆன்மிகத்தின் ஒரு புதிய செடியாக இருக்கக்கூடிய அத்தகைய பல மக்களை இந்த ஜமாஅத்தில் உருவாக்குவதற்கான நாட்டம் அந்த இறைவனுக்கு இருப்பதாகத் தெளிவாகத் தெரிகிறது. (நூல்: தஸ்கிரத்துஷ் ஷஹாதத்தைன். ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 75)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு, எனக்குப் பிறகு என்ன ஆகுமோ தெரியவில்லையே என்ற கவலை இருந்தது. அன்னாருக்குப் பிறகும் அத்தகைய மக்கள் பிறந்தார்கள் பிறந்து கொண்டும் இருக்கிறார்கள் என்று நாங்கள் சாட்சி பகர்கிறோம். அந்த மக்கள் உலகப் பேராசைகளைப் பொருட்படுத்தவில்லை. தம்முடைய உயிர்களையும் அர்ப்பணிக்கத் தயங்க-வில்லை. தன் கண்ணுக்கு முன்னால் மகன் ஷஹீது ஆவதைத் தந்தை கண்டார். தன் கண்ணுக்கு முன்னால் தந்தை ஷஹீது ஆவதை மகன் கண்டார். ஆனால், உறுதியான பாதம் ஆட்டம் காணவில்லை. பிறகு, தாமும் உயிரை அர்ப்பணித்து விட்டனர்.

மே 28, 2010 அன்று ஜுமுஆ தொழுகையின் நேரத்தில் ஜமாஅத்தின் இரண்டு பள்ளிவாசல்களில் நம்முடைய அன்பிற்குரிய அஹ்மதிகள் ஷஹீது ஆக்கப்பட்டார்கள். அப்பொழுது நான் ஒவ்வொரு வீட்டுக்கும் .்.போன் செய்த போது, குழந்தைகள், மனைவிமார்கள், சகோதரர்கள், தாய்மார்கள் மற்றும் தந்தைமார்கள் என அனைவரும் அல்லாஹ்வின் விருப்பத்தில் திருப்தியடைந்திருக்கக் கண்டேன். 'நாங்கள் அல்லாஹ்வின் விருப்பத்தில் மகிழ்ச்சியாக இருக்கிறோம்' என்ற தூதுச் செய்தி உறுதிவாய்ந்த அவர்களுடைய குரல்களில் தெளிவாகக் கேட்டது.

இந்த ஒன்றொன்று, இரண்டிரண்டு தியாகங்கள் என்ன பெரிய விஷயம். நாங்களோ எங்களுடைய அனைத்தையும், எங்கள் ரத்தத்தின் ஒவ்வொரு துளியையும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்திற்காக அர்ப்பணிக்க ஆயத்தமாக இருக்கிறோம். இது காலத்தின் இமாம் அவர்களை ஏற்றுக் கொண்டதன் காரணமாக எங்களிடம் உருவான அந்த ஈமானின் காரணமாக இருக்கிறது.

சில மாதங்களுக்கு முன்னர் ஆப்பிரிக்கா கண்டத்தின் நாடான புர்கினா.ஃ.பாஸோவில் நேசம், நன்றியுணர்வு, கலப்பற்ற தன்மை, ஈமான் மற்றும் உறுதியான நம்பிக்கை ஆகியவற்றால் நிறைந்திருந்த ஜமாஅத் மக்கள் ஒட்டுமொத்தமாகக் காட்டிய அந்த முன்மாதிரி வியக்க வைக்கக் கூடியதாகும். அதற்கு நிகர் அதுவே ஆகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்தை நிராகரித்து விடுங்கள் நாங்கள் உங்களுக்கு உயிர்ப்பிச்சை போடுகிறோம் என்று அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஆனால், மலைகளைக் காட்டிலும் உறுதி வாய்ந்ததாகத் தென்படக் கூடிய, ஈமான் மற்றும் உறுதியான நம்பிக்கையால் நிறைந்திருந்த அந்த மக்கள் இவ்வாறு பதில் கூறினார்கள்:

உயிர் ஒருநாள் போகத்தான் போகிறது. இன்று இல்லை என்றால், நாளை. இதைக் காப்பாற்றுவதற்காக நாங்கள் எங்கள் ஈமானை விற்க முடியாது. எந்த உண்மையை நாங்கள் கண்டு விட்டோமோ அதை எங்களால் விட முடியாது

இவ்வாறு ஒருவர் பின் மற்றவர் என தம் உயிரை அர்ப்பணித்துக் கொண்டே சென்றார்கள். அவர்களுடைய பெண்களும் குழந்தைகளும் கூட இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எவரும் எந்தக் கூச்சலும் போடவில்லை.

ஹஸ்ரத் சாஹிப்ஸாதா அப்துல் ல(த்)தீ.ஃப் சாஹிப் ஷஹீத் (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பிடுகையில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தஸ்கிரத்துஷ் ஷஹாதத்தைன் என்ற நூலில் ஒரு கனவைப் பற்றிக் குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்: 'இறைவன் அவர்களுடைய வழித்தோன்றல்கள் பலரை உருவாக்கி விடுவான்.' (ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 76)

ஹுஸூர் (அலை) அவர்கள் தமது கனவுக்கு இவ்வாறு பொருள் கொண்டார்கள்: 'அல்லாஹ் சாஹிப்ஸாதா சாஹிப் அவர்களின் உயிர்த்தியாகத்துக்குப் பிறகு, அவர்களுடைய வழித்தோன்றல்கள் பலரை உருவாக்கி விடுவான் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது.' இன்று ஆப்பிரிக்காவில் வாழ்பவர்கள் ஒட்டுமொத்தமாக இதற்கான முன்மாதிரியைக் காட்டினார்கள் வழித்தோன்றல்களாக இருப்பதற்கான உரிமையைச் செலுத்தி விட்டார்கள் என்பதற்கு நாம் சாட்சியாக இருக்கிறோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: 'ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட அதே உண்மைத்துவம் எனது ஆன்மாவில் உள்ளது. எனக்கு இறைவனுடன் இப்ராஹீம் கொண்டிருந்தது போன்ற தொடர்பு உள்ளது. என் இறைவனைத் தவிர வேறு எவரும் என் இரகசியத்தை அறியமாட்டார். எதிரிகள் வீணாக தம்மை அழித்துக் கொள்கிறார்கள். நான் அவர்களுடைய கைகளால் பிடுங்கப்படக்கூடிய செடி அல்ல. அவர்களுக்கு முன் சென்றவர்கள், பின் வரவிருப்பவர்கள், அவர்களில் மரணித்தவர்கள், அவர்களில் உயிருடன் இருப்பவர்கள் என அனைவரும் ஒன்று திரண்டு விட்டாலும், என்னை அழிப்பதற்காக துஆ செய்தாலும், இறைவன் அந்த அனைத்து துஆக்களையும் சாப வடிவம் தந்து அவர்களுடைய முகத்தில் எறிவான். நூற்றுக்கணக்கான அறிவாளி மக்கள் உங்களுடைய ஜமாஅத்தில் இருந்து வெளியேறி எமது ஜமாஅத்தில் இணைந்து கொள்வதைப் பாருங்கள்.' (அர்பயீன் எண் 4. ரூஹானி கஸாயின் தொகுதி 17, பக்கம் 473)


அஹ்மதிய்யத்தின் எதிரிகள் மற்றும் அஹ்மதிய்யத்தின் பகைவர்களின் அநீதியான செயல்கள், அவர்களால் துஆக்கள் மூலமாகவோ, ஆதாரங்கள் மூலமாகவோ அஹ்மதிய்யா ஜமாஅத்தை எதிர்க்க முடியாது என்பதற்குச் சான்றாகும். எந்த அரசாங்கமும் ஆற்றலும் (கையில்) உள்ளது என்ற கற்பனையில் நீங்கள் இருக்கிறீர்களோ அதைப் பயன்படுத்தியும் கொள்ளுங்கள். இன்னும் சொல்வதாயின், பயன்படுத்தவும் செய்கிறீர்கள். இந்த எதிர்ப்புகளால் அஹ்மதிய்யத்தின் காலடிகள் நின்றுவிட்டனவா? அஹ்மதிய்யத்தோ ஒவ்வொரு திக்கும், ஒவ்வொரு திசையும் பரவிக் கொண்டே செல்கிறது. ஒவ்வோர் எதிர்ப்புக்குப் பிறகும் நற்பேறு பெற்ற இயல்புள்ளவர்கள் அஹ்மதிய்யத் எனும் உண்மை இஸ்லாத்தின் அரவணைப்பிற்குள் வந்துள்ளார்கள்.

எனவே, நாம் செய்ய வேண்டிய முயற்சி என்னவென்றால், ஜமாஅத் அளவிலான தியாகம் என்ற வகையில் நிகழ்ந்த அந்த சம்பவங்கள், எவ்வாறு முன்னரை விட அதிகம் நம்மை இறைவனின் பக்கம் ஈர்த்துள்ளனவோ அந்த உணர்வை, அந்த ஈமானிய வெப்பத்தை, அல்லாஹ்வுக்கு முன்னர் அவர்கள் மேற்கொண்ட மன்றாடுதலை, தமக்குள் தூய மாற்றம் செய்வதற்கு அவர்கள் மேற்கொண்ட அந்த முயற்சிகளை ஒருபோதும் பலவீனமாக ஆக விடக்கூடாது. ஒருபோதும் பலவீனமாக ஆக விடக்கூடாது. நம்முடைய சகோதரர்களின் தியாகங்களை ஒருபோதும் மரணித்துப் போக விடக்கூடாது. அவர்கள் தமது உயிரைத் தியாகம் செய்து நமக்கு வாழ்விற்கான புதிய வழிகளைக் காட்டிச் சென்றுள்ளார்கள்.

அல்லாஹ் உங்களுடைய இஜ்திமாவை எல்லா விதத்திலும் வெற்றிகரமானதாகவும், அருளுக்குரியதாகவும் ஆக்குவானாக! உங்களுக்கு ஈமான் மற்றும் உறுதிப்பாட்டில் முன்னேற்றம் வழங்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்.

எளியவன்
கையொப்பம்
மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
ஐந்தாவது கலீ.ஃ.பத்துல் மஸீஹ்



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

23

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற வாதம்

1890–ஆம் ஆண்டு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் 'ஃபத்ஹே இஸ்லாம்' (இஸ்லாத்தின் வெற்றி) என்னும் உருது நூலை எழுதினார்கள். அமிர்தசரஸிலுள்ள ரியாஸே ஹிந்த் என்னும் அச்சகத்தில் அந்நூல் அச்சிடப்பட்டது. அதன் விலை அப்போது 8 அணாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மொத்தம் 700 பிரதிகள் அச்சிடப்பட்டன; அதில் 300 பிரதிகள் முஸ்லிம், ஹிந்து, கிறித்தவ அறிஞர்களுக்கும், பணம் கொடுத்து வாங்க முடியாத மக்களுக்காகவும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவர்கள் எழுதிய இன்னொரு நூல் 'தவ்ஸீஹே மராம்'[1] என்பதாகும். (இந்த நூல் 'குறிக்கோள் பற்றிய விளக்கம்' என்ற தலைப்பில் தமிழில் வெளி வந்துள்ளது.) இந்நூலும் அமிர்தசரஸ் ரியாஸே ஹிந்த் அச்சகத்திலேயே அச்சிடப்பட்டது. இதன் விலையும் 8 அணா என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த இரு நூல்களும் 'இஸாலே அவ்ஹாம்' என்னும் மற்றொரு நூலோடு சேர்த்து 1891–ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டன. (அந்த மூன்றாவது நூலைப் பற்றி பின்னர் விவரிக்கப்படும்.)

இக்காலத்தில் காணப்படும் நேர்மையற்ற தன்மைகளைப் பற்றி இந்நூல்களில் பின்வருமாறு அறிவிக்கிறார்கள்:

நான் மீண்டும் மீண்டும் கூறுகிறேன்; அவ்வாறு கூறுவதிலிருந்து என்னை எதுவும் தடை செய்ய முடியாது. மனித இனத்தைப் புதுப்பிக்கவும், மார்க்கத்தையும் இறையன்பையும் மனித மனங்களில் புதிதாக நிலைநாட்டி மனித இனத்திற்கு புத்துயிர் ஊட்டுவதற்காகவுமே நான் அனுப்பப்பட்டுள்ளேன். மூஸாவுக்குப் பின் தோன்றியவரைப்போல் நான் அனுப்பப்–பட்டுள்ளேன். அவருடைய ஆன்மா ஏரோது மன்னனின் காலத்தில் மிகுந்த வேதனைக்குப் பின் விண்ணிற்கு உயர்த்தப்பட்டது. (ஃபத்ஹே இஸ்லாம்)[2]

1. இந்நூலில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் 91–வது அத்தியாயமான 'அஷ்ஷம்ஸ்' என்னும் சூராவுக்கு ஓர் அழகிய விரிவுரையை வழங்கியிருந்தார்கள். அதில் மனிதனே படைப்பினங்களில் உன்னதமானவன்; மலக்குகள், நட்சத்திரங்கள், மற்றுமுள்ள பொருட்கள் ஆகிய அனைத்தும் அவனுக்குப் பணி செய்யவே படைக்கப்பட்டிருக்கின்றன என்பதை விளக்கியிருந்தார்கள். அதோடு மலக்குமார்களின் பணிகள், தன்மைகள் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தார்கள். ஜிப்ரீல் (அலை) அவர்களின் பணிகள் பற்றிக் குறிப்பாகக் கூறியிருந்தார்கள். மனிதனின் ஆன்மீக முன்னேற்றத்திற்கான விரிவான வழிமுறைகள் பற்றி விளக்கமாகக் கூறியிருந்தார்கள். ஆன்மிகக் காட்சிகளும், இறையறிவிப்புகளும் இறைவனுடைய உண்மையான நல்லடியார்களுக்கும், இறைதூதர்–களுக்கும் உரிய தனிப்பட்ட தன்மைகளாகும். அந்த வாசல் அனைவருக்கும் திறந்தே இருக்கிறது. எனவே தாம் இந்தக் காலத்தில் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியாக இறைவனால் தேர்ந்தெடுக்கப்–பட்டது வழக்கத்துக்கு மாறானதோ முடியாததோ அல்ல என்பதையும் விளக்கி இருந்தார்கள்.

2. இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத் தாம் மேற்கொள்ளவிருக்கும் ஐந்து வழிமுறைகளைப் பற்றி இந்த நூலில் விவரித்திருந்தார்கள். அவையாவன: 1) நூல்கள் வெளியிடுதல் 2) பிரசுரங்கள் வெளியிடுதல் 3) மக்களை நேரில் சந்தித்தல் 4) கடிதத் தொடர்பு 5) பைஅத் வாங்குதல். இந்த வேலைகளைச் செய்வதற்கு அவர்களுக்குப் பணம் தேவைப்பட்டது. எனவே இந்தப் பணிகளுக்காக உதவி செய்யும்படி அவர்கள் முஸ்லிம்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். மவ்லவி நூருத்தீன் (ரலி) அவர்கள் போன்ற நெருங்கிய நண்பர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் அன்னார் (அலை) வெளியிடவிருக்கும் நூல்களுக்கு ஆகும் செலவு மொத்தத்தையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தனர். ஆனால் அஹ்மது (அலை) அதனை விரும்பவில்லை. சமுதாயம் முழுவதும் இந்தப் பணிகளில் பங்கெடுப்பதன் மூலம் அருள் பெற வேண்டும் என்றே விரும்பினார்கள்.

தமது நெருங்கிய நண்பர்களான மவ்லவி நூருத்தீன் (ரலி) மொரதாபாதைச் சேர்ந்த சவுத்ரி முஹம்மது ஹுஸைன் (ரலி), பேராவைச் சேர்ந்த ஹக்கீம் ஃபஸல் தீன், ஸமானாவை சேர்ந்த மிர்ஸா ஆஸம் பேக் போன்றோர்களைப் பற்றி சிறப்பாகக் குறிப்பிடப்பட்டிருந்தார்கள்.

அந்த நூலின் இறுதியில் அவர்கள் இஸ்லாம், திருக்குர்ஆன், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் தமக்கும் எதிராக எழுப்பப்பட்டுள்ள ஆட்சேபணைகளையும், கேள்விகளையும் தமக்கு அனுப்பித் தந்தால், தாம் அவையனைத்திற்கும் நூல் வடிவில் பதில் எழுதுவதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். இந்த அறிவிப்பு ஹிஜ்ரி 1308–ஆம் ஆண்டு ஜமாதியுஸ் ஸானீ 10–ஆம் நாள் வெளியிடப்பட்டது.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமக்கு வந்த இறையறிவிப்பான, 'நான் உம்மை மஸீஹ் இப்னு மர்யமாக ஆக்கியுள்ளோம்' என்ற இறை அறிவிப்பிற்கிணங்க முன்னுள்ள இறைவேதங்களில் முன்னறிவிக்கப்பட்டுள்ள மஹ்தியும் மஸீஹும் தாமே என்ற வாதத்தை முன்வைத்தார்கள்.[3] அவர்களின் வாதத்திற்கும் உறுதிப்பாட்டிற்கும் மேலே சொன்ன இறையறிவிப்பு ஒன்றே போதுமானது. ஓர் உண்மையான இறை நம்பிக்கை –யாளருக்கு இதற்கு மேல் ஆதாரம் எதுவும் தேவையில்லை. ஆனால் அவர்களால் அழைக்கப்பட்ட மக்கள் தங்களுடைய திருப்திக்காகவும் ஏற்றுக் கொள்வதற்கும் வேதங்களிலிருந்து ஆதாரங்களை வேண்டி நின்றனர். எனவே மஸீஹும் மஹ்தியும் தோன்றுவார்கள் என்பதைக் குறிப்பிடும் பல்வேறு முன்னறிவிப்புகளை எடுத்துக்காட்ட வேண்டியிருந்தது.

இயேசு கூறினார்: "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலேயே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தல் சேர்த்துக் கொள்வேன்." (யோவான் 14:3)

"கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்." (பேதுரு 1:25)

பரிசுத்த ஆவி கூறியது: "ஏனெனில் கர்த்தர் தாமே வானத்திலிருந்து இறங்கி வருவார்." (1 தெசலோனிக்கேயர் 4:16)

"இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்." (எபிரேயர் 9:28)

'மரித்தோரையும் உயிருள்ளோரையும் நியாயம் தீர்ப்பதற்காக இயேசு தோன்றுவார்' என சீடர்கள் சபை (Apostles Creed) கூறுகிறது.

நைஸீன் சபை (கி.பி. 325) இவ்வாறு கூறுகிறது: "உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயம் தீர்ப்பதற்காக இயேசு மீண்டும் மகிமையுடன் தோன்றுவார். அவரது ஆட்சிக்கு முடிவே இராது."

டச்சு சபை பின்வருமாறு கூறுகிறது: "நம்முடைய தேவனான இயேசு கிறிஸ்து வானத்திலிருந்து உடலோடும் காணும்படிக்கு இறங்கி வருவார்."

Rev. I.M. ஹால்டிமேன் என்பவர் பின்வருமாறு கூறுகிறார்: பைபிளில் கூறப்படும் அற்புதமான நிகழ்ச்சிகளான உலகின் படைப்பு, மனிதனின் மாபெரும் வீழ்ச்சி இயேசுவின் பிறப்பு, அவரது இரண்டாவது வருகைக்குரிய இடத்தையோ, கவனத்தை ஈர்க்கும் தன்மையையோ பெறவில்லை என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத அளவுக்கு உண்மையாகும்.

3. 1885 மார்ச் 8–ஆம் தேதி நூருத்தீன் (ரலி) அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்:

பராஹீனே அஹ்மதிய்யா என்னும் நூலை எழுதிய அடியேன் இஸ்ரவேல் சமுதாயத்திற்காக நாசரேத்தில் தோன்றிய இறைதூதரின் ஆவியின் பணிவு, அடக்கம், தாழ்மைக்குணம், அக்கறை ஆகிய பண்புகளின் மூலம் மனித இனத்திற்குப் புத்துயிர் ஊட்டும்படி இறைவனால் பணிக்கப்பட்டுள்ளேன். உண்மையான ஈடேற்றத்தைப் பெறுவதற்கும் தெய்வீக வாழ்விற்குரிய அடையாளங்களையும் ஏற்றுக் கொள்ளப்படுதல் மற்றும் இறையன்பின் கதிர்களை இவ்வுலகிலேயே காண்பதற்கும் பயணிக்க வேண்டிய பாதையை அறியாத மக்களுக்கு அந்த நேரிய பாதையைக் காட்டித் தரும்படி நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

இந்த விஷயங்களைத் தாங்கிய ஒரு கடிதம் 1884–ஆம் ஆண்டு பராஹீனே அஹ்மதிய்யா அச்சானபோது அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஏற்கனவே கூறியது போன்று உண்மையில் அவர்கள் தாம் தான் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி என்ற இறையறிவிப்பை முதன் முதலில் பெற்றது 1882 ஆம் ஆண்டில் ஆகும்.

பொதுவாக இறைத்தூதர்கள் இறைவனால் சுமத்தப்படும் அந்த மாபெரும் பொறுப்பை ஏற்பதற்கு மிகவும் ஆவலாக இருக்க மாட்டார்கள். அவர்கள் அந்தப் பணிக்கு மிகவும் பொருத்தமானவர்கள் என்பதில் ஐயமில்லை. ஆரம்பத்திலிருந்தே அவர்கள் தமக்கே உரிய விதத்தில் அமைதியாக ஒரு சீர்திருத்தவாதியின் பணியைத்தான் செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் சொந்த விருப்பத்தின்படி விடப்பட்டால் ஒரு சீர்திருத்தவாதியின் பணியைத் தாமாக முன்வந்து ஏற்க மாட்டார்கள். அப்போது கூட அவர்கள் தமது தகுதியற்ற தன்மையை ஒப்புக் கொண்டு அதனை ஆற்றல் மிக்க இறைவன் முன் அறிவிக்க ஆவலாகவே இருப்பார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக இறையுதவிக்காகவும், பாதுகாப்பிற்காகவும் பிரார்த்தனை செய்யவும் ஆவலாக இருப்பார்கள்.

தாவீது (அலை) கூறுகிறார்கள்: "நானோ ஒரு புழு; மனுஷனல்ல; மனுஷரால் நிந்திக்கப்பட்டும் ஜனங்களால் அவமதிக்கப்பட்டும் இருக்கின்றேன்." (சங்கீதம் 22:6)

இறைதூதர்கள் முற்றிலும் இறைவனின் கருணையைச் சார்ந்து நிற்கின்றனர்; தங்களால் ஆகக்கூடியது எதுவுமில்லை என்று கருதுகின்றனர். எனவே இறையழைப்பு வரும் பொழுது அச்சத்தால் பீடிக்கப்படுகின்றனர். அந்தப் பணிக்குத் தங்களைத் தகுதியற்றவர் –களாகக் கருதுகின்றனர்.

இந்த விஷயத்தில் எரேமியா தீர்க்கதரிசி காட்டிய தயக்கத்தைப் பற்றி டாக்டர் ஜான் ஸ்கின்னர் என்பவர் இவ்வாறு கூறுகின்றார்:

"இந்தப் பணிக்கு தாம் தகுதியற்றவர் என்று அவர் அதிசயிக்கிறார். 'ஆ! கர்த்தராகிய ஆண்டவரே! .இதோ, நான் பேச அறியேன். சிறுபிள்ளையாய் இருக்கிறேன்'." (எரேமியா 1:6)

இது ஒன்றும் தெய்வீகக் காட்சியை மறுப்பதாகாது. காலம் செல்லச் செல்ல வரும் அறிவும் ஆற்றலும் பெற்று நான் பேசுகின்றவரை இதனைத் தள்ளிப்போடும் என்று காலம் தாழ்த்தும் விண்ணப்பமே ஆகும். ஆனால் இது பிரார்த்தனை –யினால் மாற்ற முடியாத அழைப்பு ஆகும். அந்தச் செய்தியை அவர் மக்களுக்குத் தெரிவித்தாக வேண்டும். அதற்கான ஆற்றல் அவருடையதல்ல; மாறாக சர்வ வல்லமையுள்ள இறைவனின் வார்த்தையாகும் என்ற உறுதிப்பாட்டின் காரணமாக எரேமியாவின் தவறான எண்ணம் போக்கப்படுகின்றது.

மோசேயும் இது போன்ற எண்ணத்தில் இருந்தார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இதே நிலைக்கு ஆளானார்கள். அவர்கள் இறைதூதராக நியமிக்கப்பட்டு மூன்றாண்டுகளுக்கு பின்னரே அவர்கள் வெளிப்படையாக மக்கள் மத்தியில் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார்கள். (ஸீரத்துன் நபி பாகம் 1; ஷிப்லி; ஆஸம்கார் 2–வது பதிப்பு பக்கம் 195)

அவர் மேலும் கூறுகிறார்: 'இயேசுவின் இரண்டாவது வருகை பற்றிக் குறிப்பிடும் வசனங்கள் பைபிளில் 20 வசனங்களுக்கு ஒருமுறை இடம் பெறுகின்றன.'

அவர் இன்னும் கூறுவதாவது, 'அவர் வராமல் போவாரேயாகின், அது வாட்டமும், அழிவும், வீழ்ச்சியுமாக அமையும். எல்லா வேதங்களின் கூற்றும் பொய்யாகிப் போகும். பட்ட மரத்தின் உதிர்ந்த இலைகள் சுழன்றடிக்கும் காற்றினால் வாரிச் செல்லப்படுவது போல் அடித்துச் செல்லப்படும்.'

காத்திருந்து களைத்துப்போன சில கிறித்தவர்கள், அவரது வருகை என்பது பரிசுத்த ஆவியைக் கண்டு மனமாற்றம் பெறுவதன் மூலம் அவரை ஏற்றுக் கொள்வது அல்லது திருச்சபையின் மீது அவரது ஆட்சியை ஒப்புக் கொள்வது என்பதையே குறிக்கும் என்று கருதத் தலைப்பட்டனர். ஆனால் இந்தக் கருத்தை Rev. W.E. ப்ளாக்ஸ்டோன் என்பவர் பின்வருமாறு மறுப்பது சரியெனவே படுகிறது. அவர் கூறுகிறார்:

"இஸ்ரவேலர்களில் ஒரு பகுதியினர் உள்ளனர்; அவர்கள் தம்மைச் சீர்திருத்தம் பெற்றவர்கள் அல்லது பரந்த மனப்பான்மை கொண்டவர்கள்' என்று கருதுகின்றனர். அதே போன்று பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களுக்கும் ஆன்மிகமான பொருள் கொள்கின்றனர். அதன் காரணமாக முன்னர் வந்த அதே மெசாயாவே வருவார் என்ற நம்பிக்கையிலிருந்து பின்வாங்கி விட்டனர். நாம் வாழும் இந்த அற்புத காலத்தின் அடையாளமாக யூதர்கள் புற ஜாதியார்களோடு கைகோர்த்து வேத வசனங்களை உயிர்ப்பிக்க வேண்டும். (ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார் – லூக்கா 18:8) வேதங்களில் காணப்படும் தெளிவான வசனங்களுக்கு இப்படி ஆன்மிக ரீதியான பொருள் கொள்வதன் மூலம் அனைத்து கிறித்தவக் கோட்பாடுகளின் அடிப்படைகளும் வலுவிழந்து போகும்; முற்றிலும் மத நம்பிக்கையற்ற நிலைக்கு நம்மை தள்ளி விடும். திரு. J. மன்றோ என்பவர் கூறுகிறார்: "இரண்டாவது வருகையை குறித்துக் குறிப்பிடும் இடங்களில் 'ப்ரௌஸியா' முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அது அதே மெஸாயா மீண்டும் வருவதையே குறிக்கின்றது."

இரண்டாவது வருகையைப் பற்றிய முன்னறிவிப்புகளுக்கு முன்னர் வந்த ஈஸா (அலை) அவர்களே மீண்டும் வானத்தில் இருந்து இறங்கி வருவார்கள் எனப் பொருள் கொள்ளக் கூடாது என்பதை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் விளக்கிக் கூறினார்கள். இது சாத்தியம் என்றால் எலியா (அலை) அவர்களும், இத்ரீஸ் (அலை) அவர்களும் வேத வசனங்களுக்கு இணங்க பூத உடலோடு விண்ணிலிருந்து இறங்கி வந்திருப்பார்கள். ஆனால் இந்த விஷயத்தில் இயேசு வழங்கிய கீழ்வரும் தீர்ப்பு தெளிவானதாகவும் தீர்க்கமானதாகவும் இருக்கிறது:

'நியாயப் பிரமாணமும், தீர்க்கதரிசிகள் யாவரும் யோவான் வரைக்கும் தீர்க்கதரிசினம் உரைத்ததுண்டு.

நீங்கள் ஏற்றுக் கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன் தான்.' (மத்தேயு 11:13–14)

மேலும் நாம் இவ்வாறு படிக்கிறோம்: 'அப்போது, அவருடைய சீடர்கள் அவரை நோக்கி, அப்படியானால் எலியா முந்தி வர வேண்டும் என்று வேதபாரகர் சொல்லுகிறார்களே அதெப்படி என்று கேட்டார்கள்.

இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: எலியா முந்தி வந்து எல்லாவற்றையும் சீர்படுத்துவது மெய்தான். ஆனாலும் எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவனை அறியாமல் தாங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள்; இவ்விதமாய் மனுஷகுமாரனும் அவர்களால் பாடுபடுவார் என்றார்.

அவர் யோவான் ஞானஸ்னானனைக் குறித்துத் தங்களுக்குச் சொன்னார் என்று சீஷர்கள் அப்பொழுது அறிந்து கொண்டார்கள்." (மத்தேயு 17:10–13)

தம்முடைய வருகையைப் பற்றி இயேசு தமது சீஷர்களுக்குப் பின்வருமாறு கூறுகிறார்:

"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்–கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லுமளவும். இது முதல் என்னைக் காணாதிருப்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (மத்தேயு 23:39)

தாமே மீண்டும் தோன்றப் போவதில்லை என்பதையும் அவருடைய நாமத்தில் இன்னொருவர் தோன்றுவார் என்பதையும் அவர் இங்குத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

(தொடரும்...)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவன் என்னை இந்த பதினான்காம் நூற்றாண்டின் துவக்கத்தில் தன் புறமிருந்து நியமித்து உறுதியான இஸ்லாம் மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்காகவும், ஆதரவு அளிப்பதற்காகவும், இந்தக் குழப்பமான காலத்தில் திருக்குர்ஆனின் மேன்மைகளையும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மகத்துவங்களையும் வெளிப்படுத்துவதற்காகவும், எனக்கு வழங்கப்பட்ட ஒளிகள், அருள்கள், அற்புதங்கள், மார்க்க ஞானங்கள் ஆகியவற்றின் உதவியினால் இஸ்லாத்தைத் தாக்குகின்ற எதிரிகளுக்கு பதிலடி கொடுப்பதற்காகவும் அனுப்பியிருக்கிறான் என்ற இந்த முக்கியமான விஷயத்தை நான் தற்போது அல்லாஹ்வுக்காக அறிவிக்கின்றேன்.

(பரகாத்துத் துஆ. ரூஹானி கஸாயின் தொகுதி 6 பக்கம் 34)

# ஜமாஅத்தின் பொருள் தியாகத் திட்டங்கள், அவற்றின் சுருக்கமான அறிமுகம் அதன் நோக்கம், குறிக்கோள் மற்றும் எந்த ஃபண்டில் தொகையைச் செலுத்த வேண்டும் என்ற விபரம்

(நஸாரத் பைத்துல் மால் ஆமது, காதியான்)



தமிழாக்கம்: இப்னு வஸீம்

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

يُقِيْمُوْنَ الصَّلٰوةَ وَ مِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ

பொருள்: (நம்பிக்கை கொண்டவர்கள்) தொழுகையை நிலைநாட்டுவார்கள். மேலும், நாம் அவர்களுக்கு வழங்கிய -வற்றிலிருந்து அவர்கள் இறைவழியில் செலவு செய்து கொண்டும் இருப்பார்கள். (அதிகாரம் அல் பகரா, வசனம் 4)

திருக்குர்ஆனில் பொருளைக் கொண்டு செய்யப்படும் இபாதத் பற்றிய குறிப்பு இருவகையான சந்தாக்களின் வடிவில் கூறப்பட்டுள்ளது. ஒன்று, கடமையான மற்றும் கட்டாயமான சந்தா ஆகும். இரண்டாவது, விருப்பச் சந்தா ஆகும். கடமையான சந்தாக்கள் போக, இறைவனின் நபி அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் குரலுக்கு செவிசாய்த்தவாறு, விருப்பச் சந்தாக்களை செலுத்தி தங்களது தியாகங்களை முன்வைக்கும் மக்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அல்லாஹ் கூறுகிறான்:

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّ عَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ ۚ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

பொருள்: எவர்கள் தங்கள் செல்வத்தை, இரவும் பகலும், மறைவாகவும் வெளிப்படுத்தியும், அல்லாஹ்வின் வழியில் செலவு செய்து வருகிறார்களோ அவர்களுக்கான வெகுமதி அவர்களின் இறைவனிடம் உள்ளது. அவர்களுக்கு எந்த அச்சமும் ஏற்படாது. அவர்கள் துயரடையவும் மாட்டார்கள். (அதிகாரம் அல் பகரா, வசனம் 275)

உயர்வான அஹ்மதிய்யா இயக்கம் அல்லாஹ்வின் சிறப்பான நாட்டத்தின் கீழ், இஸ்லாத்தைப் பரப்புவதற்காகவும் படைப்பினங்களைச் சீர்திருத்துவதற்காகவும் நிறுவப்பட்டது. இன்று அல்லாஹ்வின் அருளால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக முன்னேற்றம் அடைகிறது. இந்த முன்னேற்றத்துடன் இயக்கத்தின் எல்லாப் பணிகளுக்காகவும் ஒவ்வோர் அடியிலும் செல்வங்களின் தேவையுள்ளது. இந்தத் தேவைகளை முழுமைப்படுத்துவதற்காக ஜமாஅத் மக்கள் அதிகதிகமாகப் பொருள் தியாகம் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.



இது குறித்து ஒரு ஹதீஸ் குத்ஸீ இவ்வாறு உள்ளது: 'ஆதமின் மகனே! நீ மனம் திறந்து செலவு செய்! அல்லாஹ் உன் மீதும் செலவு செய்வான்.' (முஸ்லிம் கிதாபுஸ் ஸகாத்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் வழியில் எண்ணி எண்ணி செலவு செய்யாதீர்கள். இல்லையென்றால், அல்லாஹ்வும் உங்களுக்கு எண்ணி எண்ணியே கொடுப்பான். கருமித்தனத்தினால் உங்கள் பணப்பையின் வாயை மூடிவிட்டு அமர்ந்து விடாதீர்கள். இல்லையென்றால், அதன் வாய் அடைத்தே வைக்கப்படும். எவ்வளவு சக்தி உள்ளதோ அவ்வளவு மனம் திறந்து செலவு செய்யுங்கள். (புகாரி - கிதாபுஸ் ஸகாத், பாபுத் தஹ்ரீஸி அலஸ் ஸதக்கத்தி வஷ்ஷ∴பாஅத்தி ∴பீஹா அய்ஸன் பாபுஸ் ஸதக்கத்தி ∴பீமா இஸ்த்திதாஅ)

இதே போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

"அன்பர்களே! இது மார்க்கத்திற்காக மார்க்கத்தின் நோக்கங்களுக்காகத் தொண்டு செய்வதற்கான நேரமாகும். இந்த நேரத்தைப் பொன்னானதாகக் கருதுங்கள். ஏனெனில், இது மீண்டும் ஒருபோதும் கிடைக்காது. (கிஷ்தி நூஹ் (தமிழில் - நூஹ் நபியின் கப்பல்))

மேலும், கூறுகிறார்கள்: உங்களில் ஒருவர் இறைவனை நேசித்து அவனது வழியில் பொருள் செலவு செய்வாராயின், மற்றவர்களைக் காட்டிலும் அவருடைய செல்வத்திலும் அதிக வளம் ஏற்படுத்தப்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஏனெனில், செல்வம் தானாக வருவதில்லை. மாறாக, இறை நாட்டத்தால் வருகிறது. ஆக, எவர் இறைவனுக்காக செல்வத்தின் சில பகுதியை விடுகிறாரோ அவர் நிச்சயமாக அதைப் பெறுவார். ஆனால், எவர் செல்வத்தை நேசித்து, இறைவழியில் ஆற்ற வேண்டிய தொண்டினை ஆற்றுவ -தில்லையோ அவர் நிச்சயமாக அந்த செல்வத்தை இழப்பார்.

செல்வம் உங்களுடைய முயற்சியால் வருகிறது என்று நினைக்காதீர்கள். மாறாக, இறைவன் தரப்பிலிருந்து வருகிறது. நீங்கள் செல்வத்தின் ஒரு பகுதியைக் கொடுத்தோ அல்லது வேறு ஏதாவது வகையில் ஏதேனும் ஒரு தொண்டாற்றியோ, இறைவன் மீதும் அவனால் அனுப்பப்பட்டவர் மீதும் ஏதேனும் கருணை காட்டுவதாக நினைக்காதீர்கள். மாறாக, உங்களை இந்தத் தொண்டுக்காக அவன் அழைப்பது அவன் உங்கள் மீது புரியும் பேரருள் ஆகும்..... நான் உங்களுக்கு மீண்டும் மீண்டும் கூறுகிறேன். இறைவன் உங்களின் தொண்டுகளின் சிறிதும் தேவையற்றவன் ஆவான். ஆனால், அவன் உங்களுக்குத் தொண்டு செய்வதற்கான வாய்ப்பளிப்பது அவன் உங்கள் மீது புரியும் அருளாகும். (மஜ்முஆ இஷ்திஹாராத் (பிரசுரங்களின் தொகுப்பு) தொகுதி 3 பக்கம் 497- 498)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தாம் மே 2, 2022 அன்று ஆற்றிய ஈதுல் ∴பித்ர் பேருரையில் கூறுகிறார்கள்: "இதே போன்று ஜமாஅத்தில் இன்னும் சில உதவித் தொகைக்கான ∴பண்டுகள் (நிதிகள்) உள்ளன. திருமண ∴பண்டு உள்ளது. நோயாளிகளுக்கான

ஃபண்டு உள்ளது. மாணவர்களின் கல்விக்கான ஃபண்டு உள்ளது. நல்வாய்ப்பு பெற்றவர்கள் இவற்றில் பங்கெடுக்க வேண்டும்.''

மேலும், கூறுகிறார்கள்: ''ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலமான இந்தக் காலத்தில் ஒரு ஜிஹாத், பொருள் தியாகத்துக்கான ஜிஹாதும் ஆகும். ஏனெனில், இது அல்லாமல், இஸ்லாத்தைத் தற்காப்பதற்காக இலக்கியங்கள் அச்சாகவும் முடியாது. திருக்குர்ஆன் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்படவும் முடியாது. இந்த மொழியாக்கங்கள் உலகின் மூலை முடுக்குகள் வரை எட்டவும் முடியாது. மிஷன் ஹவுஸ்கள் (பிரச்சார நிலையங்கள்) திறக்கப்படவும் முடியாது. முரப்பிமார்களும் முபல்லிஃக்மார்களும் தயாராகவும் முடியாது. முரப்பி



-மார்களும் முபல்லிஃக்மார்களும் ஜமாஅத்களுக்கு அனுப்பி வைக்கப்படவும் முடியாது. பள்ளிவாசல்கள் கட்டப்படவும் முடியாது. பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லூரிகள் மூலமாக ஏழை மக்கள் வரை கல்வி வசதிகள் எட்ட வைக்கப்படவும் முடியாது. மற்றும் மருத்துவமனைகள் மூலமாக, துயரத்திற்குள்ளான மனிதகுலத்திற்குத் தொண்டு செய்யவும் முடியாது.

எனவே, எப்பொழுது வரை உலகின் அனைத்து மூலைகள் வரையும், ஒவ்வொரு மூலையிலும் உள்ள ஒவ்வொரு மனிதர் வரையும், இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்றடையாதோ மேலும், எப்பொழுது வரை ஏழைகளின் தேவைகள் முழுமையான முறையில் நிறைவேற்றப்படாதோ அந்த நேரம் வரை, இந்தப் பொருள் போர் தொடர்ந்து கொண்டே இருக்கும். மேலும், தத்தமது வசதி வாய்ப்புக்கேற்ப ஒவ்வோர் அஹ்மதியும் இதில் பங்கெடுப்பது அவசியமாகும். (மார்ச் 31, 2006 அன்று நிகழ்த்தப்பட்ட ஜுமுஆ பேருரை. அல் ஃபஸ்ல் பத்திரிகை, இலண்டன் வெளியீடு - ஏப்ரல் 21, 2006 பக்கம் 6)

எனவே, ஓர் அஹ்மதி என்கிற வகையில் நமது கடமை என்னவென்றால், நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அன்னாரின் கண்ணியத்திற்குரிய கலீஃபாக்களின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டும். மேலும், எந்த நோக்கங்களுக்காக நம்மிடம் கடமையான சந்தாக்களை செலுத்துவதுடன், விருப்பச் சந்தாக்களுக்காகப் பொருள் தியாகம் செய்யுமாறு கேட்கப்படுகிறதோ அதை நாம் மனமார நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக்கூடியவர்களாக ஆகவும் உண்மையான அஹ்மதிகள் என்றும் அழைக்கப்படவும் முடியும். மேலும், பொருள் தியாகத்தின் பரக்கத்திலிருந்து அருள் பெற்றவர் ஆக முடியும்.

ஜமாஅத்தின் எந்தத் திட்டங்கள், நிதிகளில், ஜமாஅத் மக்கள் தங்களது சக்திக்கு ஏற்ப சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிதி அல்லது அமானிதங்களில் நன்கொடை தொகை, சதக்கா, உதவித் தொகை செலுத்தலாமோ அவற்றின் விவரப்பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. உள்ளூர் மால் செகரட்டரிகளிடம், இதில் கூறப்பட்டுள்ள திட்டங்களில் தொகையை செலுத்தி ஜமாஅத்தின் ரசீதுகளில் சந்தா பெறப்படுகிறது. இந்த அனைத்து நிதிகளில் இருந்தும், எல்லா செலவுகளும் காலத்தின் கலீஃபா அவர்களின் ஒப்புதலோடு செய்யப்படுகின்றன.

எனவே, ஜமாஅத் மக்களிடம் கேட்டுக் கொள்ளப்படுவ-தாவது, அவர்கள் இந்த நிதிகள், திட்டங்களில் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக, ஆற்றல் உள்ள அளவு நன்கொடைகளைச் செலுத்துங்கள். அப்போதுதான் இந்தத் தொகைகளைக் கொண்டு ஜமாஅத்தின் தேவைகளுக்கு ஏற்ப சம்மந்தப்பட்ட பணிகளைச் செய்ய வைக்க முடியும். தேவையுடையவர்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும். அல்லாஹ் தங்கள் அனைவருக்கும் காலத்தின் கலீஃபா அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப பொருள் தியாகம் செய்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! ஆமீன்.

### 1. தஃமீரே மஸாஜித்: (பள்ளிவாசல்கள் கட்டுதல்)

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

إِنَّمَا يَعْمُرُ مَسٰجِدَ اللّٰهِ مَنْ اٰمَنَ بِاللّٰهِ

பொருள்: அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்பவரே அல்லாஹ்வின் பள்ளிவாசல்களைக் கட்டுகிறார். (9:18)

இதே போன்று, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''எவர் அல்லாஹ்வுக்காகப் பள்ளிவாசலைக் கட்டுகிறாரோ அவருக்காக அல்லாஹ்வும் சொர்க்கத்தில் அது போன்ற வீட்டைக் கட்டுகிறான்.''

இறை இல்லத்தை, அதாவது, பள்ளிவாசல்களைக் கட்டுவதற்காக ஒவ்வோர் ஆண்டும் இந்திய சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா தனது பட்ஜெட்டில் தொகையை ஒதுக்குகிறது. ஆயினும், அந்தத் தொகை ஜமாஅத்தின் தேவையை முழுமைப்படுத்துவதில்லை. இந்தியாவின் பல ஜமாஅத்களில் இப்போது பள்ளிவாசல்களும் தொழுகை மையங்களும் கட்ட வேண்டியுள்ளது.

மேலும், கட்டுமான செலவுகளும் மிகவும் அதிகம் வந்து விடுகின்றன. இந்த ஃபண்டிலிருந்து இந்தியாவின் ஜமாஅத்களில் பள்ளிவாசல்களும் தொழுகை மையங்களும் கட்டப்படுகின்றன. ஜமாஅத் மக்கள் இந்த முக்கியமான திட்டத்தில் அதிகதிகமாகப் பங்கெடுக்க வேண்டும். தமது மகிழ்ச்சியான சந்தர்ப்பங்கள் போன்றவற்றில் பள்ளிவாசல்கள் கட்டுவதற்கான ஃபண்டில் இயன்ற அளவு சந்தா செலுத்த வேண்டும்.

2. இம்தாத் நாதார் மரீஸான்:
(இயலாத நோயாளிகளுக்கான உதவித் தொகை)

தமது சிகிச்சைக்கான சக்தி படைத்திராத, ஏழை இயலாதவர்களான மற்றும் உதவி கோருபவர்களான, ஊழியர்கள் அல்லாத ஜமாஅத் உறுப்பினர்களுக்கு இந்த ∴பண்டில் இருந்து இயன்ற அளவு உதவி செய்யப்படுகிறது. இதே போன்று ஜமாஅத்தின் ஊழியர்களுக்கும், அவர்கள் உடல் ஆரோக்கியம் பெற்று சிறந்த முறையில் மார்க்கத் தொண்டாற்ற வேண்டும் என்பதற்காக, இந்த ∴பண்டிலிருந்து சிகிச்சை செய்து கொள்ள வைக்கப்படுகிறது. ஜமாஅத் மக்கள் இந்த ∴பண்டில் தொகையை செலுத்தி ஏழை மற்றும் தேவையுடையவர்களான நோயாளிகளுக்கு உதவி செய்து அவர்களின் துஆக்களைப் பெறலாம்.

3. இம்தாத் துலபா: (மாணவர்களுக்கான உதவித் தொகை)

இந்த ∴பண்டிலிருந்து நஸாரத் த∴லீம் மூலமாக புத்திசாலிகளான, தேவையுடையவர்களான மற்றும் ஏழைகளான மாணவர்களுக்கு, சமுதாயத்துடைய எதிர்காலத்தின் இந்த விளக்குகள் உயர்கல்வி பயின்று சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் பயனுள்ளவர்களாகத் திகழ வேண்டும் என்பதற்காக உதவித் தொகை வழங்கி அவர்களுக்கு உதவி செய்யப்படுகிறது. மேலும், தேவைக்கு ஏற்ப கடன் கொடுக்கப்படுகிறது.

இந்த நோக்கத்திற்காக சந்தாவோ அல்லது உதவித் தொகைகளோ இந்த ∴பண்டில் செலுத்தப்படுகின்றன. இந்த ∴பண்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த வண்ணம் சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்: “ஜமாஅத்தில் உதவித் தொகைக்கான இன்னும் சில ∴பண்டுகளும் உள்ளன........... மாணவர்களின் கல்விக்கான ∴பண்டு உள்ளது. நல்வாய்ப்பு பெற்றவர்கள் அதில் பங்கு பெற வேண்டும்.” (ஈதுல் ∴பித்ர் பேருரை மே 2, 2022)

4. கி∴பாலத்தே யதாமா ∴பண்டு:
(அநாதைகளைப் பராமரிப்பதற்கான ∴பண்டு)

அநாதைகளான, ஆதரவற்ற குழந்தைகளின் தேவைகளைப் நிறைவேற்றுதற்காக, அவர்களைப் பராமரிப்பதற்காக இந்த ∴பண்டு நிறுவப்பட்டுள்ளது. இந்த ∴பண்டிலிருந்து அநாதைகளுக்கு உதவி செய்யப்படுகின்றது. படைபினங்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளின் பால் கவனமூட்டியவாறு அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

وَاٰتَى الْمَالَ عَلٰى حُبِّهٖ ذَوِى الْقُرْبٰى وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنَ
وَابْنَ السَّبِيْلِ ۙ وَالسَّآئِلِيْنَ وَفِى الرِّقَابِ

“எந்த நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வின் நேசத்தையும் திருப்தியையும் பெறுவதற்காக தமது உறவினர்கள், அநாதைகள், மிஸ்கீன்கள், பயணிகள், யாசிப்பவர்கள் மற்றும் ஏழைகள் ஆகியோருக்குத் தங்களது செல்வங்களைக் கொடுக்கின்றார்களோ அவர்களே உண்மையான இறையச்சமுடையவர்கள் ஆவார்கள்.” (2:178)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘நானும் அநாதைகளைப் பராமரிப்பவரும் சொர்க்கத்தில் இது போன்று இருப்போம்’ என்று கூறி தமது ஷஹாதத் விரலையும் நடுவிரலையும் சேர்த்துக் காட்டினார்கள். இதே போன்று பிறிதோரிடத்தில் கூறினார்கள்: எவர் ஓர் அநாதைக் குழந்தையின் உணவுக்கான பொறுப்பேற்றுக் கொண்டாரோ அவரை கண்ணியமும் கம்பீரமும் மிக்க அல்லாஹ் சொர்க்கத்தில் நுழையச் செய்வான்.

இது குறித்து ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:

இப்பொழுது நான் உலகின் மற்ற அமீர்களுக்கும் கூறுகிறேன். தங்களுடைய நாட்டில் பொருளாதார ரீதியில் பலவீனமான, கல்வி கற்க முடியாத, உணவுக்கான செலவுகளுக்கும் கஷ்டப்படக்கூடிய அநாதை அஹ்மதிகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுங்கள். பிறகு, எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

குறிப்பாக, ஆப்பிரிக்கா நாடுகளில். இதே போன்று வங்காளதேசம் உள்ளது. இந்தியா உள்ளது. இதன் பால் அதிகக்குறை இருக்கிறது. கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது. ஆக, முறையாக ஒரு திட்டம் வகுத்து இந்தப் பணியை ஆரம்பம் செய்யுங்கள். தத்தமது நாடுகளின் அநாதைகளை சீர்தூக்குங்கள். எனக்கு நம்பிக்கை இருக்கிறது! பொருளாதார ரீதியில் பலம்படைத்த ஜமாஅத்



மக்கள் இந்த நற்பணியில் அதிகதிகமாகப் பங்கு பெறுவார்கள். இன்ஷா அல்லாஹ்! அவர்களை சீர்தூக்குதவற்கான செலவுகளில் நமக்கு எந்தக் குறையும் ஏற்படாது. இன்ஷா அல்லாஹ்! (ஜுமுஆ பேருரை ஜனவரி 23, 2004)

இது மிக முக்கியமான பணியாகும். இதன் பால் ஒவ்வோர் அஹ்மதியும் கவனம் செலுத்த வேண்டும். தாமாக எந்த ஓர் அநாதையையும் அறிந்திருக்கவில்லை என்றாலும், ஜமாஅத்தில் அநாதைகளுக்கான ∴பண்டு உள்ளது. அதில் அதிகதிகமாகப் பங்கு பெற வேண்டும். இந்த ∴பண்டில் சந்தா செலுத்த வேண்டும்.

5. வஸாயி∴ப் (உதவித் தொகைகள்)

ஜமாஅத்தின் விதவைகள் மற்றும் ஏழை மக்களுக்கு நிரந்தரமான மாதாந்திர உதவித் தொகைக்காக இந்த ∴பண்டு நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலமாக விதவைகள், ஏழைகள், பலவீனமானவர்கள் மற்றும் தேவையுடைய மக்களுக்கு,

அவர்களுக்கு ஓரளவு நிதியுதவி கிடைக்க உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

6. வக்தீ இம்தாத்: (தற்காலிக உதவி)

ஜமாஅத்தின் தேவையுடையவர்கள் மற்றும் ஏழை மக்களுக்கு, கஷ்ட நேரத்தில் சிறிது வசதி ஏற்பட, தற்காலிக தேவைகளில் உதவி புரிவதற்காகத் தற்காலிக உதவித் தொகை வழங்கப்படுகிறது.

7. மர்யம் ஷாதீ ∴பண்டு: (மர்யம் திருமண ∴பண்டு)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் திருமணங்களின் போது நடைபெறும் தீய சம்பிரதாயங்களில் இருந்து நம்மை விடுவித்துள்ளார்கள். நாம் இந்தத் தீய சம்பிரதாயங்களிலிருந்து தவிர்ந்திருப்பது அவசியமாக இருக்கின்ற அதே வேளையில், நாம் மகிழ்ச்சி மற்றும் திருமணங்களின் போது ஷாதீ ∴பண்டு மற்றும் ஷுக்ரானா ∴பண்டில் சந்தா செலுத்தி ஓர் ஏழையின் மகிழ்ச்சியில் கலந்து கொள்ள முடியும்.

ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இந்தத் திட்டத்திற்கு 'மர்யம் ஷாதீ ∴பண்டு' என்று பெயரிட்டுள்ளார்கள். இந்த ∴பண்டில் சேரும் தொகையில் இருந்து ஏழை மற்றும் தேவையுடைய பெண் பிள்ளைகளின் திருமணத்திற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த ∴பண்டில் தொகை செலுத்துவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:

"இவ்வாறே, ஜமாஅத்தில் இன்னும் சில உதவித் தொகை ∴பண்டுகள் உள்ளன........ ஷாதீ (திருமண) ∴பண்டு உள்ளது. நல்வாய்ப்பு பெற்றோர் இதில் பங்கெடுக்க வேண்டும்.

8. சய்யிதுனா (நம் தலைவர்) பிலால் ∴பண்டு:

அஹ்மதிய்யத்துக்காகத் தமது உயிரைத் தியாகம் செய்கின்றவர்களின் குடும்பத்திற்கு இந்த ∴பண்டிலிருந்து நிதி உதவி செய்யப்படுகிறது. இத்தகைய மக்கள் தமது உயிரைத் தியாகம் செய்து நமக்கு (எல்லார் சார்பாகவும் நிறைவேற்றப் -படும் கடமையான) ∴பர்ஸே கி∴பாயாவை நிறைவேற்றிச் சென்றுள்ளார்கள்.

இப்பொழுது அவர்களின் குடும்பத்துக்கு நிதியுதவி செய்ய வேண்டிய கடன் நமது பொறுப்பில் உள்ளது. இதற்காக இந்த ∴பண்டிலும் வசதியுள்ள அளவு சந்தா செலுத்துங்கள். இந்தச் சந்தாவை செலுத்தக்கூடிய மக்களின் பெயர்ப்பட்டியல் துஆவிற்காக ஒவ்வொரு மாதமும் காலத்தின் கலீ∴பா அவர்களுக்கு முன் சமர்ப்பிக்கப்படும். இன்ஷா அல்லாஹ்!

9. இம்தாத் ஸன்அத் வ திஜாரத்:

வேலை செய்யும் திறமை கொண்டிருக்கக்கூடிய, சிறிதளவு பொருளாதரவு கிடைத்து விட்டால் தமது வாழ்வைக் கழிக்க முடியும் என்றுள்ள மக்களுக்கு, இந்தத் திட்டத்தின் கீழ் பொருளுதவி செய்யப்படுகிறது.

அத்துடன் ஜமாஅத்தின் தேவையுடையவர்கள், (உதவித் தொகைப்) பெறத் தகுதி வாய்ந்தவர்கள், வேலை -யற்றவர்கள் மற்றும் பலவீனமான மக்களுக்கு, குறிப்பாக, இளைஞர்களுக்குத் தமது சொந்தக் காலில் நிற்பதற்காக, அவர்கள் சிறு தொழில் தொடங்குவதற்கு, இயன்ற அளவு சிறிது பொருளுதவி செய்யப்படுகிறது.

வசதி படைத்த ஜமாஅத் மக்கள் இந்த முக்கியமான திட்டத்தில் சந்தா, நன்கொடை வழங்க வேண்டும். இவ்வாறு சமுதாயத்தின் இளைஞர்கள் நல்ல வேலை வாய்ப்புப் பெற்று, தமது வாழ்வியலை மேம்படுத்திக் கொள்ள முடியும். மேலும், அவர்கள் மார்க்கத்திற்காகப் பொருள் தியாகத்தில் பங்கெடுக்கவும் முடியும்.

10. புயூத்துல் ஹம்து ஸ்கீம்: (புகழுக்குரிய வீடுகள் திட்டம்)

இந்தத் திட்டத்தை ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஆரம்பித்தார்கள். தமது தலையை மறைப்பதற்கு ஏற்பாடு இல்லாத மற்றும் தமக்காக வீடு கட்டுவதற்கோ அல்லது மராமத் (சீரமைப்புப் பணிகள்) போன்றவற்றை செய்து கொள்ளவோ இயலாத, நிர்பந்தத்திற்காளான, ஏழைகளான, தேவையுடைய ஜமாஅத் மக்களான இத்தகைய வறியோருக்கு இந்தத் திட்டத்தின் கீழ் இயன்ற அளவு, சிறிதளவு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

ஜமாஅத்தின் ஊழியர்களுக்கும் வீடு மராமத் பணிக்காக இயன்று அளவு உதவப்படுகிறது. இயக்கத்தின் ஊழியர்களுக்குத் தங்குவதற்கான வீடுகள் கட்டப் -படுகின்றன.

இந்தத் திட்டம் வசதி படைத்த மக்களுக்காகக் கிடையாது. அவர்களுக்கு வீடு கட்டுவதற்காகப் பெரும் பெரும் தொகையைக் கொடுப்பதற்கு இதன் பட்ஜெட்டில் இடமும் இல்லை. ஜமாஅத் மக்கள் இந்தத் திட்டத்தில் பங்கு பெற வேண்டும். அதிகதிகமாகச் சந்தா கொடுக்க வேண்டும்.



11. Satellite ∴பண்டு:

ஹஸ்ரத் நான்காவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் ஹிஜ்ரத் மூலமாக கிடைத்த எண்ணற்ற அருட் கொடைகளில், ஒரு மாபெரும் அருட்கொடை, MTA வடிவில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்குக் கிடைத்தது. இது துவங்கிய 1991-இல் MTA நிகழ்ச்சி தினமும் சில மணி நேரங்களுக்கு ஒளிபரப்பாக ஆரம்பித்தது. பிறகு, 24 மணிநேர ஒளிபரப்பு ஆரம்பமானது.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் அருளுக்குரிய கிலா∴பத்

காலகட்டத்தில், இப்போது இறை அருளால், முழு உலகிற்குமாக 8 டிஜிட்டல் சேனல்கள் 24 மணி நேரமும் ஒளிபரப்பாகின்றன. நாளுக்கு நாள் புதப்புது முன்னேற்றப் பாதைகளைக் கடந்து கொண்டே செல்கின்றன. உண்மை இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி MTA மூலமாக முழுவுலகிலும் சென்று அடைகிறது.

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இல்ஹாமில் கூறினான்:

'நான் உமது தூதுச் செய்தியை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன்.'

இந்த முன்னறிவிப்பு MTA மூலமாகப் பட்டப்பகல் சூரியனைப் போன்று நிறைவேறுகிறது. இஸ்லாத்தைப் பரப்புவதற்கு MTA மிகவும் முக்கியமான ஒரு வழியாகும். இந்த அமைப்பை நடத்துவதற்கு மிகப் பெரும் செலவை ஜமாஅத் மேற்கொள்கிறது.



காலத்தின் கலீ∴பா அவர்களைப் பார்க்கக் கூடிய நேசர்கள் இந்த அமைப்பு தம் மீது புரிந்துள்ள கருணைக்கு நன்றி செலுத்தும் விதமாக, உணர்வுகளுடனும் கலப்பற்ற தன்மையுடனும் செல்வங்களை சமர்ப்பிக்கிறார்கள்.

இந்தச் சந்தா முழுவதும் மர்கஸில் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் கருவூலத்தில் சேர்கிறது. இதிலிருந்து உள்ளூர் அளவில் எந்த செலவும் செய்ய அனுமதியில்லை. இந்த முக்கியமான திட்டத்தில் ஜமாஅத் மக்கள் அதிகதிகமாகப் பொருள் தியாகம் செய்து இஸ்லாத்தைப் பரப்பும் இந்தத் திட்டத்தில் முழுமையான முறையில் பங்கு பெற வேண்டும்.

### 12. சந்தா இஷாஅத்தே இஸ்லாம்:

தமது செல்வங்களை வங்கிகளிலும் அஞ்சலகங்களிலும் சேர்த்து வைப்பவர்களுக்கு அந்தத் தொகைக்கு, வங்கி அல்லது அஞ்சலகம் தரப்பிலிருந்து கூடுதலாகக் கிடைக்கும் தொகை, வட்டியின் வட்டத்திற்குள் வருகிறது. அந்தத் தொகையை சொந்த செலவு செய்வதோ அல்லது அதிலிருந்து ஏதாவது ஒரு ∴பண்டில் சந்தா செலுத்துவதோ ஒருபோதும் சரியான மற்றும் ஆகுமான பணியல்ல. இந்தத் தொகை சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் ∴பண்டான 'இஷாஅத்தே இஸ்லாம்' -இல் செலுத்தப்படும்.

இந்தத் தொகையை உள்ளூர் அளவில் எந்த ∴பண்டிலும் செலவு செய்யக் கூடாது. வட்டியை மேற்கொள்வது, இறைவனுடன் போர் புரிவதாகும். ஓர் அஹ்மதி இறைவனுடன் போர் புரிவது பற்றி யோசிப்பார் என்று கூட எவரைப் பற்றியும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. ஜமாஅத்தின் இலக்கியங்களை அச்சடித்தல், இஸ்லாத்தைப் பரப்புவதற்கான பணி இந்த ∴பண்டிலிருந்து செய்யப்படுகிறது. ஜமாஅத் மக்கள் இத்தகைய வட்டித் தொகையை இஷாஅத்தே இஸ்லாம் ∴பண்டில் செலுத்துங்கள்.

### 13. சதக்காத் வ குர்பானீ ஜான்வர்:

சதக்காவால் துன்பம் அகற்றப்படுகிறது. ஒரு பிரச்சனை மற்றும் நோயின் போது சதக்கா செலுத்துவதனால், அல்லாஹ் அவருடைய பிரச்சனைகளை, துன்பங்களை அகற்றி விடுகிறான். நோயாளிக்கு ஆரோக்கியத்தை வழங்குகிறான். ஜமாஅத்தார் எவர்கள் சதக்கா செலுத்த விரும்புகிறார்களோ அல்லது ஈதுல் அழ்ஹாவின்போது குர்பான் கொடுக்க விரும்புகிறார்களோ அல்லது குழந்தைகளுக்கு அகீக்கா கொடுக்க விரும்புகிறார்களோ, இத்தகைய மக்கள் தங்களுடைய தொகையை மேற்கூறப்பட்ட ∴பண்டில் செலுத்தலாம். சதக்காவின் ∴பண்டில் சந்தா கொடுப்பதனால், தலைமையகம் தேவையுடையவர்களுக்குக் குறித்த நேரத்தில் உதவி செய்ய முடியும்.

### 14 ∴பித்ரானா (சதக்கத்துல் ∴பித்ர்)

∴பித்ரானாவை ஈதுல் ∴பித்ருக்கு முன் செலுத்த வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் அதன் மூலம் ஏழைகளுக்கும் மிஸ்கீன்களுக்கும் பெருநாளுக்கு அத்தியாவசியமான பொருட்களைக் கிடைக்கச் செய்ய முடியும். ∴பித்ரானாவுக்கான விகிதாச்சாரம், ஒரு 'சாஉ' அதாவது, ஏறத்தாழ 2½ கிலோ கோதுமை அல்லது அதன் தொகையாகும். ஒருவர் முழுமையான விகிதாச்சாரப்படி ∴பித்ரானா வழங்குவதற்கான வசதி படைத்திருக்கவில்லை எனில், விகிதாச்சாரத்தில் பாதியையும் செலுத்தலாம்.

∴பித்ரானா செலுத்துவது ஒவ்வொரு முஸ்லிம் ஆண், பெண் மற்றும் குழந்தையின் மீதும் கடமையாகும். எதுவரையெனில், புதிதாகப் பிறந்த குழந்தை சார்பாகவும் இந்தச் சந்தா செலுத்துவது கட்டாயமாகும். மேற்கூறப்பட்ட விகிதாச்சாரமான, 2½ கிலோ கோதுமையைக் கருத்திற் கொண்டு ஒவ்வோர் ஆண்டும் நாடளவில், நாட்டின் கரன்ஸியில் ∴பித்ரானாவுக்கான விகிதாச்சாரத்தை நிர்ணயிக்க வேண்டும். அதற்கேற்ப அதை வசூலிக்க வேண்டும்.

∴பித்ரானாவின் மொத்த தொகையின் பத்து சதவீதத்தை மத்திய நிதியாகத் தனியாக ஒதுக்க வேண்டும். 90 சதவீதத்தை நாடளவில் விநியோகிக்க வேண்டும். ∴பித்ரானா தொகையை விநியோகித்த பின், தொகை ஏதும் எஞ்சினால், அதை உள்ளூர் செலவீனங்களுக்காக செலவு செய்வதற்குப் பகரமாக மத்திய நிதியில் செலுத்த வேண்டும்.

### 15. ∴பித்யத்துஸ் ஸியாம்:

ஏதேனும் ஒரு நோயோ, பலவீனமோ அல்லது பயணமோ முன்வரும்போது, அருளுக்குரிய ரமலானின் நோன்பு வைக்க முடியாதவர்களுக்குத் திருக்குர்ஆனிலுள்ள கட்டளையாவது, அவர்கள் அந்த நன்மையை விட்டும் இழப்பிற்குரியவர்களாக இருந்ததற்கான ஈடாகவும் வருங்காலத்தில் நோன்பு வைப்பதற்கான நல்வாய்ப்பு கிடைக்கவும், ∴பித்யா செலுத்த வேண்டும். இந்த ∴பித்யாவுக்கான அளவைத் தமது வசதிக்கேற்ப தேவையுடையவர் ஒருவருக்கு ஒரு நோன்புக்குப் பகரமாக இரண்டு நேரத்திற்கான உணவாகவோ அல்லது அதற்கான தொகையாகவோ செலுத்த வேண்டும்.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*




طُوْرُ (தூர்) எனும் சொல் மலையைக் குறிக்க திருக்குர்ஆனில் 2:64,94; 4:155; 19:53; 20:81; 28:30,47; 95:3 ஆகிய இடங்களில் வருகிறது. 95:3–வது வசனத்தில் மட்டும் طُوْرِ سِيْنِيْنَ (சினாய் மலை) என்று வருகிறது.

திருக்குர்ஆனில் 52–வது அதிகாரத்தின் பெயர் மலை என்பதாகும். இதனை மலை என்று பலரும் மொழியாக்கம் செய்துள்ளனர். சிலர் சினாய் மலை என்று மொழியாக்கம் செய்துள்ளனர். 52–வது அதிகாரத்தின் பெயர் தூர் என்று வருகிறதே தவிர சினாய் மலை என்று வரவில்லை.

மலை என்று திருக்குர்ஆனில் வருமிடங்களில் சிலர், தூர் மலை என்றும் (சினாய்) மலை என்றும் மொழியாக்கம் செய்துள்ளனர். சினாய் என்பதை அடைப்புக்குள் போட்டுள்ளனர். 52–வது அதிகாரத்தை அத்தூர் – ஒரு மலையின் பெயர் என்றும் சினாய் மலை என்றும் மொழியாக்கம் செய்துள்ளனர்.

என் கருத்து என்னவென்றால், அல்லாஹ் என்ன சொல்லைக் கூறியுள்ளானோ அதனை அப்படியே மொழியாக்கம் செய்ய வேண்டும். தூர் என்றால் மலை என்று எழுத வேண்டும். தூர் மலை என்றோ, சினாய் மலை என்றோ எழுதக் கூடாது. விளக்கத்தை அடைப்புக்குள்ளோ அடிக்குறிப்பாகவோ எழுதலாம்.

அடுத்து மலையை உங்களுக்கு மேலே உயர்த்தினோம் என்று திருக்குர்ஆனில் வருமிடங்களில் பலரும், மலையைப் பூமியிலிருந்து பிடுங்கி தலைக்கு மேல் அந்தரத்தில் நிறுத்தி அல்லாஹ் இஸ்ரவேலர்களிடம் உறுதிமொழி வாங்கினான் என்று தவறாகப் பொருள் கொண்டுள்ளனர்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தும், ததப்புருல் குர்ஆன், அஹ்லே குர்ஆன் ஆகியவை அக்கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அஹ்லே குர்ஆன், ‘‘தூர் என்னும் உயரமான மலை அடிவாரத்தில் வாழ்ந்து வந்த உங்களிடமும் அவ்வாறே அந்த வாக்குமூலம் இருந்தது’’ என்று 2:63 வசனத்திற்குப் பொருள் கூறியுள்ளது.

ததப்புருல் குர்ஆன் 2:63 வசனத்துக்கு, ‘‘இந்த ஒப்பந்தம் இஸ்ரவேலர்களின் தலைவர்களோடு மலையடிவாரத்தில் செய்து கொள்ளப்பட்டது என தவ்ராத்தும் குர்ஆனும் ஒருபோல் சொல்கின்றன. அப்போது இறைவனின் கட்டளையால் கடும் நில நடுக்கம் ஒன்று மலையை ஆட்டியது.......... இந்நிலையைத்தான் குர்ஆன் தலைக்கு மேல் மலையை உயர்த்தியதாக் குறிப்பிடுகின்றது.’’ (பாகம் 9 பக்கம் 374–375)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், 2:64 வசனத்தின் அடிக்குறிப்பில், வரஃபஃனா ஃபவ்ககு முத்தூர். அதாவது மலையை உங்களுக்கு மேலே உயர்த்தினோம் என்பதன் கருத்து உங்களை அம்மலையின் அடிவாரத்தில் நிற்கச் செய்தோம் என்பதே. (யாத்திராகமம் 19:17 காண்க.) – என்று எழுதியுள்ளது.

இவ்வசனத்தின் அடிக்குறிப்பில், Malik Ghulam Farid, The words do not mean that Mount Sinai was physically lifted up to hang over the heads of the Israelites. The only mean that the covenant was taken at a time when the Israelites were standing at the foot of the Mount. They may also refer to the scene when the Mount Sinai was terribly shaken with an earthquake, while the Israelites were camping at its foot. (Exod 1912) On such an occasion the shaking of a high mountain peak appears as it were hanging over the heads of those standing near it என்று எழுதியுள்ளார். இக்கருத்தை A.J. Droge, Muhammad Ali ஆகியோரும் கூறுகின்றனர்.

7:171 வசனத்திற்கு, உமர் ஷரீப் இப்னு அப்துஸ் ஸலாம் தன் ஞானமிகு குர்ஆன் சொல்லுக்குச் சொல் தமிழாக்கத்தில், نَتَقْنَا எனும் சொல்லுக்கு பிடுங்கினோம் என்று பொருள் கூறியுள்ளார். இதே பொருளை முஹம்மது முஸ்தஃபா O.M. அப்துல் காதிர் பாகவி, அப்துல் ஹமீது பாகவி, மவ்தூதி P.M. பீர் முகம்மது பாகவி, ஜவாஹிருல் குர்ஆன், தப்ஸீருல் ஹமீது ஆகியோர் (மலையைப் பிடுங்கி என்றே) தம் தப்ஸீர்களில் பொருள் கொண்டுள்ளனர். அச்சொல்லுக்கு மலையை உயர்த்துதல் என்று பலர் பொருள் கொண்டுள்ளனர். அவர்களுள் ஒருவர் P. ஜெய்னுல் ஆபிதீனும் ஆவார். ஆனால் அவர் 7:171 வசனத்தின் விளக்கவுரையில், மலையைப் பிடுங்குதலுக்கு ஆதரவாகவே எழுதியுள்ளார்.

அவர், இதை நேரடிப் பொருளில் புரிந்து கொள்ளாமல் பல்வேறு விளக்கங்களைச் சிலர் கூறுகின்றனர். ஆனால் தூர் மலையை உயர்த்தியதாகக் கூறப்படுவதை அதன் நேரடிப் பொருளில் தான் புரிந்து கொள்ள வேண்டும். ‘அது தூர் மலையைப் பிடுங்கினோம்’ என்றும், ‘மேலே மேகம் போல் அது நின்றது’ என்றும், ‘தங்கள் மீது அது விழுந்து விடுமோ என்று அவர்கள் அஞ்சினார்கள்’ என்றும் திருக்குர்ஆன் 7:171 வசனத்தில் கூறப்படுவதால் இதற்கு வேறு விதமான விளக்கம் கொடுப்பது தவறாகும். மலையை உயர்த்துவது அல்லாஹ்வுக்கு மிகவும் எளிதானதே என்று எழுதியுள்ளார். என் கருத்து என்னவென்றால், இவ்வளவு கூறும் P.J. தன் மூலத்தில் ‘பிடுங்கி’ என்று எழுதாமல் ‘உயர்த்தி’ என்று எழுதுவது ஏன்? இவர்களின் மறுப்புக்கு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் 7:172 வசனத்துக்கு அடிக்குறிப்பில் தரும் விளக்கம் போதுமானது என்று கருதுகிறேன். ‘‘ஒருவர் மலையின் கீழ் நின்று பார்த்தால் அவருடைய தலைக்கு மேலே, நிழற்குடையைப் போன்று இருப்பதாகவே காணப்படும். இதற்கு இயற்கைக்கு மாற்றமான பொருள் கொள்ள வேண்டிய அவசியமில்லை. திருக்குர்ஆன் விரிவுரையாளர்களை ஏதாவதோர் மலையின் அடிவாரத்திற்கு அழைத்துச் சென்றால் அவர்கள் தமது விரிவுரைகளில் இது பற்றிய கதைகள் எழுதுவதை தவிர்த்திருப்பார்கள்.’’

இந்த அனுபவத்தை நான் நேரில் கண்டுள்ளேன். மலையின் உயர்ந்த தோற்றமும் அம்மலையின் பின்னால், மேகக்

கூட்டங்கள் விரைந்து செல்வதையும், இதனால் மலை அசைவதைக் கண்டு ஒரு கணம் நான் மலைத்து விட்டேன். மேலும் இரயில் பயணத்தில் நாம் பயணிக்கும் இரயில் நின்று கொண்டிருக்கும்போது, நம் இரயிலின் இரு புறங்களிலும் விரைந்து செல்லும் இரயில்களைக் காணும் போது நின்று கொண்டிருக்கும் நம் இரயில் சென்று கொண்டிருப்பதைப் போன்று தோன்றும். இதே காட்சிதான் மலை அசைவதைப் போலும், நம் மீது விழுந்து விடுமோ என்று தோன்றுவதும் ஆகும். மலையைப் பிடுங்கி என்று பொருள் கொள்வோர், அல்லாஹ் இஸ்ரவேல் மக்களின் தலைக்கு மேல் மலையை நிறுத்தி பயமுறுத்தி கட்டாய ஒப்பந்தம் வாங்கினான் என்று எண்ணுவது ஆகும். இது அல்லாஹ்வின் கண்ணியத்துக்கும் மேன்மைக்கும் இழுக்காக இவர்களுக்குத் தோன்றவில்லையா? நவூதுபில்லாஹ்! இது ஒருபுறம் இருக்கட்டும். மலையைப் பிடுங்க அல்லாஹ்வுக்கு கடினமன்று. மிக மிக மிக எளிதானதுதான். ஆனால் அவன் அதைச் செய்ய மாட்டான். அவன் வானவர்களைத் தன் பெண் மக்களாக ஆக்குவதையும், ஈசா நபியையும் அவரது தாயையும் இரு தெய்வங்களாக ஆக்குவதையும் செய்வதில்லை. இவை எளிதான செயல்களே! அவனால் செய்ய முடியும் என்பது வேறு; செய்ய மாட்டான் என்பது வேறு; இரண்டையும் போட்டுக் குழப்பக் கூடாது.

மலைகளைப் பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் 13:4; 15:20; 16:16; 21:32; 27:62; 31:11; 41:11; 50:8; 77:28 ஆகிய வசனங்களில் மலைகளை உறுதியாக நாட்டியுள்ளோம் என்று கூறுகிறான்.

ஒரு மலையைப் பிடுங்கும்போது பூமியின் ஆழத்தில் மலையைப் போன்று ஆழத்திலும் அகலத்திலும் அவை காணப்படுகிறது. கடலில் பனிப்பாறைகள் வெளியே தெரியும் தோற்றம்போல் 9 மடங்கு தோற்றம் கடலின் ஆழத்தில் மறைந்திருக்கும். அப்படி ஒரு சம்பவம் நடந்ததாக இருந்தால் மிக மிக ஆழத்திலும் அகலத்திலும் ஒரு பெரும் அதல பாதாளம் ஏற்பட்டு, பூமியின் ஆழத்தில் உள்ள நெருப்புக் குழம்பும், பிற கனிமங்களும் வெளிப்பட்டு, முழு உலகையும் அதிர்ச்சிக்கும் வியப்புக்கும் ஆளாக்கி வரலாற்றில் இடம்பெற்றிருக்கும். உடன்படிக்கை வாங்க மலை அடிவாரத்தில் நின்ற அத்தனை பேரும் அதல பாதாளத்தில் விழுந்திருப்பார்கள். இது திருக்குர்ஆன் விரிவுரையாளர்களின் அதீத கற்பனை!

இது போன்ற தவறான கற்பனையில் சிலர் இஸ்லாத்தை விட்டே வெளியேறி விடுகின்றனர். உண்மை சம்பவம் ஒன்றைக் கூறுகிறேன். நைல் நதி சந்திரனிலுள்ள ஒரு மலையிலிருந்து உற்பத்தியாகிறது என்று ஒரு மவ்லவி கூற, இதனைக் கேட்ட ஒருவர் இஸ்லாத்திலிருந்து கிறித்தவராக மாறி விடுகிறார்.

கிறித்தவர் ஒருவர் பூமியிலுள்ள சந்திர மலையிலிருந்து நைல் நதி உற்பத்தியாகிறது எனக் கூறக் கேட்டு, நபிமொழியின் உண்மையை உணர்ந்து மீண்டும் முஸ்லிமாகி விடுகிறார். இது ஹஸ்ரத் மவ்லானா ஹக்கீம் நூருத்தீன் (ரலி) அவர்களின் வாழ்வில் நடந்த ஒருவரின் சம்பவம் ஆகும். எனவே பூமியிலிருந்து மலையைப் பிடுங்கினால் ஒப்பந்தம் வாங்க மலையடிவாரத்தில் யாரும் இருக்க மாட்டார்கள். மலையைச் சுற்றி ஏற்படும் அதல பாதாளத்தில் அவர்கள் விழுந்து விடுவார்கள் என்பதை அவர்கள் மறந்து விட்டனர்.

**(A.P.Y. அப்துல் காதிர்)**

*(22-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஃபித்யாவைத் தேவையுடைய ஒருவருக்கு சுயமாகவும் வழங்கலாம். அதற்கான மற்றொரு வழிமுறையாவது, தமது வசதிக்கேற்ப சராசரியாக இருநேர உணவிற்கான செலவை ரொக்கப் பணமாக ஜமாஅத் அமைப்பின்கீழ் செகரட்டரீமால் அவர்களிடம் செலுத்த வேண்டும். ஃபித்யா மூலம் வரக்கூடிய வரவு அனைத்தும் பொதுவாக நாடளவில் செலவு செய்யப்படும். ஆனால், ஒரு நாட்டில் அது செலவு செய்யப்படுவதற்கு உரிமைபெற்ற மக்கள் கிடைக்கவில்லை என்றால், இந்தத் தொகை மத்திய நிதியில் செலுத்தப்படும்.

### 16. ஈது ஃபண்டு:

இந்தச் சந்தா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்திலிருந்து நிறுவப்பட்டுள்ளது. மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களில், மனிதன் தன் சொந்த சந்தோஷத்திற்காக உடைகள், உணவுகள் மற்றும் விருந்துகள் போன்றவற்றில் பலவகையில் செலவு செய்து, அன்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அன்பளிப்புகளை வழங்கும் அதே வேளையில், அந்த மகிழ்ச்சியில் மார்க்கத்தின் நோக்கங்களையும் நினைவிற்கொள்ள வேண்டும் என்பதே இந்த நிதி நிறுவப்பட்டதன் நோக்கமாகும்.

எனவே, மகிழ்ச்சியான பண்டிகைகளின் போது, அவர் மார்க்க நோக்கங்களைக் கட்டாயம் நினைவிற் கொள்வார் என்று ஒவ்வோர் அஹ்மதியிடமும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் சம்பாதிக்கக் கூடிய அஹ்மதி சகோதரர்கள் இந்த ஃபண்டில் தலைக்கு ஒரு ரூபாய் வீதமாக ஈது ஃபண்டு வழங்கி வந்தார்கள். இப்போது பண மதிப்பு அதே அளவு இருக்கவில்லை என்பதால், இதை ஒரு ரூபாய் அளவு வரையறுத்து வைப்பதற்குப் பகரமாக இந்த ஃபண்டின் ஆன்மாவைக் கருத்திற் கொண்டவாறு இரு பெருநாள்களின் போதும், இயன்ற அளவு ஈது ஃபண்டு செலுத்த வலியுறுத்தி இருக்கிறார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இந்தக் காலம் எவ்வளவு அருளுக்குரியது! எவரிடமும் உயிரைக் கொடுக்குமாறு கூறப்படுவதில்லை. மேலும், இந்தக் காலம் உயிர்களை அர்ப்பணிக்கும் காலம் அல்ல. மாறாக, வசதிபடைத்த நிலையில் பொருள் செலவு செய்வதற்கான காலமாகும். (காதியான் அல்ஹகம் பத்திரிக்கை, ஜூலை 10, 1903)

அல்லாஹ் நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் அன்னாரது மாபெரும் கலீஃபாக்களின் திட்டங்களுக்கு செவிசாய்த்தவாறு பொருள் தியாகத்தில் பங்கெடுப்பதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! ஆமீன்!

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
எந்தப் பொருளை இறை வழியில் செலவு செய்து
முன்னே அனுப்பி வைத்து விட்டீர்களோ அதுவே
உங்களது அசல் பொருளாகும். எது பின்னால்
எஞ்சியிருக்கின்றதோ அது வாரிசுகளின் பொருளாகும்.
(முஸ்லிம் – கிதாபுஸ் ஸக்காத்)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam